Tamil Heritage Foundation International Digital Library EBook collection

உ நாடார்குல மித்திரன். 1926 செப்டம்பர் மீ 20 உ

# பெற்ற தாயின் கடமையும், உற்ற சேயின் செய்கையும்.

( G. அருணசலம் எழுதியது ).

எல்லாம் வல்ல இறைவனின் அருட் இணையால், அவனின் இன்பம் நல்க அவனிட்ட ஆக்ஞைப்படி இவ்வுலகின் கண் மானிடவுடல் பெற்றனந்த முயிர்கள். துன்ப நீக்கத்திற்கும் இன்ப ஆக்கத்திற்கு மென ஜெனித்த இவ்வுயிர்கள் ஆண், பெண் என இருபிரிவாயுள. இவ்விரண்டினமும் இணைதற்கான ஒரு மித்த வழியை ஆன்றோர் தீட்டியுள சாஸ்திரம் சாற்றுவது பின்வருமாறு:—அதாவது, தங்களை யொத்த மானிட உருவெடுக்க முனைந்துள்ள காரிட்ட ஆணவ உயிர்கள் உடல்பெற்று உசவிபெறுதற்கும், இறைவனின் இன்ப நிலையைப்பெறுதற்கும் தனித்தின்றி உற்ற துணையொடும் தன்னைப்போல் ஏனைய உயிர்களும் கடைத்தேறல் வேண்டுமென்ற பரோபகார அன்பு நிலையைப் பெறுதற்கும் இலக்காயுள்ள தர்மவழி இல்லறமே என்பதாம். அஃதே ஆண்டவனின் கட்டளை. இறைவனுள் முமஃதே.

இந்நல்லற மேற்று இயங்குங்கால் தோன்றும் காரிட்ட ஆணவவுயிர்களை அல்லும்பகலும் ஆர்முதூட்டி சீராட்டிப் பாராட்டி அவைகளின் நன்மை தீமைகளே—சுகதுக்கங்களே தனதெனப் பெரிதும் கருதும் பெண்ணினமே பெற்றதாயென உலகம் சொல்லும். அவ்வில்லறத்திற்கட்டுண்ட பிறிதொன்றாகிய ஆணினமோ இங்கலன்களில் அத்துணை சிரத்தைகொண்டில. அது குறித்தே அவ்விருபாலாரையும் விளம்புங்கால்தோறும் "தாய் தந்தை" "மாதா பிதா" என்பதில் பெண்ணினமான தாயைமுன்படுத்தலானது. ஆகையான் அவ்வுயிர்களின் நலன்களிற் பெரிதும் கவலையுள்ள தாயின் கடமையாதென்பதே இற்றெழுந்த வினா. தாயின் கடமையாதெனபரோ:—இறைவனின் இன்ப நிலையெய்த இயற்றிய இச்சரீரங்கொண்டு தன்பாலுதித்த உயிர்கள் நன்மையானவைகளைப்பற்றி தின்மையானவைகளைத் தள்ளி, அறநெறி வழுவாது அன்புருக்கொண்டு இன்னுவொழித்து பன்முறைகளில் நன் முறை யொழுகி கோரிய கருமமாற்ற ஆக்கு வித்தலே யென்பது நனிவிளங்கும். பொது நோக்காகத் தாயின் கடமை யிதுபடியிருக்க சேயெனச் செப்புறும் அவ்வயிர்கள் தனது பரிபக்குவகாலங்களுக்கேற்ப மாறுந்திறத்தலான் இவைகள் மாட்டுதாயின் நடைமுறைகளும் அவ்வக்காலங்களுக்கேற்ப மாறுந்திறமுடைத்ததே. இத்தால் தாய் தன் கடனாற்றுதலினும் மக்களின் நிலையையும் காலத்தையும் நோக்கித் தன் கண்ணில் எண்ணெய்வார்த்துக் கொண்டிருத்தல் வேண்டுவதாகிறது. தஞ்சேய்பாற் றாற்ற வேண்டிய கடமைக்குரிய காலமும் நிலையும் யாதெனிலோ, தொட்டிற்பழக்கம் சுடுகாடு மட்டும் என்றும், இளமையிற்கல் என்றும் பெரியாராண்ட நீதிமுறையான் இளமை—பால்யப்பர்வமேயாகும். இப்பர்வத்தின் பின்னரோவெனின் இவ்வுலகம் நமக்காகப் படைக்கப்பெற்றதெனினும், நன்மையுறுதலினும் தின்மைகளனந்த முனவென்பதால், பாதகங்கள் பலநிறைந்த இப்பாரில் நன்மை தின்மைகளறியாது நவிலுதற்காற்று நடைமுறைகளில் பயில்விக்கப்பெறின், சீருறச் செய்ப யாராலாகும்? ஆகையினமையின்பாலியர் வாலிபராகுமுன்னரே நன்மை கடைப்பிடிக்கப் பழக்குவித்தல் வேண்டும்.

எது குறித்து ஒருவன் ஒருவர்க்கு குருவாயுளனோ, அவன் அதில் அதிசிறப்புடைத்தனுயிருத்தல் காண்க. ஆகலான் தஞ்சிறார்களின் நலனைக் கோரும் தாய் அந்நலன்களை நடைமுறையில் கொண்டிருத்தலில் பெரிதும் கடைப்பாடுடையராகின்றனர். அஃதின்றேல், தானும், தன்மக்களும் தோன்றியதின் குணமறியப்பெறாது குலவயத்தே கீழ்மைப்படுத்தப் பெறுவர்; துன்புறுத்தப்படுவர்; பெரிதும் இடும்பைப்படுவர்; இகழப்படுவர்; அரங்கத்தினின்றுந் தள்ளப்படுவர்; ஐயோ! பிறப்பிற்கும் இறப்பிற்கும் இடையில் ஒல்லும் வகையறியாது தியங்குமிவர்கள் வீணில் ஞமன் வாய்ப்பட்டு நையுறுவர்; பாவம் இவர்களின் கதி அதோகதியிலன்றோ அங்கிக்கிறது? இவர்கட்குப்பெரிதும் இரங்குகின்றோம்.

மற்றும் இம்மானிட உலகில் ஒருவர்க்கும் பிறிதொருவர்கரும் அன்பு காரணமும், பொருள் காரணமும், ஆற்றல் காரணமும், மற்றும் ஏதேனுமொரு காரணம் பற்றி பற்றுதல் நிகழும். அவைகளிலெல்லாம் தலைசிறந்து விளங்குவது அன்பே. ஏனையவைகளோ நிலைதவழ்வன. ஒன்று எது பற்றி சம்பந்தம் நிகழ்ந்ததோ அது முடிவுபெறின் அத்துடன் அது சமாப்தியெய்தும். ஆகலான் நிலைபெற்றிலங்குந் தன்மை பெற்ற அன்பே யாண்டும் கையாளப்படல் வேண்டும். நாமெடுத்துக்கொண்ட தாய் சேய்சம்பந்தத்திற்கும் உற்ற துணை புரிவது இவ்வன்பை நிகர்த்து பிறிதொன்று முளதோ? இல்லை. (அன்பினைப் பற்றி விரிக்கிற் பெருகு மென்றஞ்சி விடுத்தாம்.) அவ்வன்பு சேயில் செலுத்தப்படுங்கால் வாஞ்சை யென்றும் குறிப்பர். இஃதால் தாய் சேய் பால் உள்ளன்பான வாஞ்சையொடு நிகழ்த்தும் அறச்சொற்களே, அறச் செயல்களே, அறநெறிகளே சேயின் மனதிற்றிகழும்; அதன்படி இயங்குவர்; நன்னிலை நோக்குவர்; அறவழிச் செல்வர். இன்றி கடூர வாக்கியத்தால் கடுகடுத்த முகத்துடன், இடியொத்த இசையொடு நடப்பின் சிறாரின் நிலையாதாகும்? நோக்குமீ, அவைகள் உலகம் இப்படித்தானோ வென நினைந்து நினைந்து தானும் தன் மொழியாலும், செயலாலும், மனத்தாலும் அம்மறநெறி பற்றியன்றோ கடையில் அடங்காப் பிடாரிகளாய் ஆகின்றனர். என்னே தாயின் செயல்! உலக மின்னதென வறியாச் சேய்க்கு, நெருப்பு சுடும்; தண்ணீர் குளிரும் என அறியா அருஞ்சிறார்க்கு, இது அண்ணன்; இது சகோதரி; இது மாமன்; இது மாமி யென அறியாக் குழவிக்கு, இது கொள்வன; இது நீக்குவனவெனப் பிரிமுகப் படுத்தறியாப் பாலர்க்கு பெற்ற தாய்—அரும்பாடுபட்டு ஈன்ற மாதா—அருமை அம்மாள்போதங் கொடுப்பது எவ்வழி? எவ்வகைச் சொல்? எது நடத்தை? இவ்வகை தானோ? கமது வாயையும் கையையும் எதிர் நோக்கும் பாலர் பால் நன்மை பயிற்றும் பான்மை இஃதோ? கடுகடுத்த முகம் என் செய்யும்? இடியை யொத்த பேரொலி எதியற்றும்? தூஷணை பாஷியம் எது கொணரும்? ஒன்று மிலவே. அனர்த்தம் விளைவிக்கும் அவ்வனைத்தையும் கொட்டிக் குளறும் பேதை மடந்தையர் சேயை ஈன்று தான் யாது பயன்? இத்துறை பயில்விக்க ஈனுதலினும் ஈனுதொழிவது எத்துணை சிறப்புடைத்தாகும்? சேயை ஈன்று செம்மை நெறி பயிற்ற ஆற்றலில்லார்க்கு—அறியாதார்க்கு—மாட்டார்க்கு மக்கள் மேற் காதலெற்றுக்கு? வீண் டம்பத்திற்கா? உலக ஒப்பிற்கா? வேண்டாம் வேண்டாம் அவ்வீணை! விடும் விடும் அக்காதலை! பகுத்தறிவற்ற பிராணிகள் ஈன்று திரியும் பாவனையொக்க, மக்களைப் பெற்றிடுதல் வெட்கமிலையா? இத்தகைக் காரிகைகளீன்ற வாலிபர் கோட்டம் பல நாட்டில் மலிந்து தென்படுவதேதனுலென்பரோ, இதனுலே யென்போம். நல் வினை தீ வினையறியாப் பதரும், கோபத்தால் கொதிப்புறும் குண்டனும், பாவத் தீட்டுடைய பாதகரும், கொலைக் கஞ்சா முண்டனும், கண்டதே காக்ஷி கொண்டதே கோலமெனத் திரியும் குறும்பரும், உண்ட வீட்டிற் இரண்டகம் விளைக்கும் சும்பரும், காமப் பித்தேறிய கசடரும், குண்டுனி பியம்பிப் பூசல் விளைக்கும் பாதகரும், முதியோர் பணத்தை ஆராதுரித்தனஞ் செய்யும் அசடர்களும் தங்கள் தங்கள் திருவிளையாடல்களை நெட்டுற நிகழ்த்திக் கொண்டிருத்தல் எதனுல்? துள்ளித் திரிகின்ற காலத்தில துடுக்கடக்கி மடக்கி வதக்காதொழிந்ததனுலன்றோ?

ஆகையான், அருமைத் தாய்மார்களே! எங்களின் யூகவாழ்வில் யாங்கள் சுக வாழ்வெய்த தங்களின் கருணைநோக்கே பெரும் பயனுடைத்தாயுளது. வேளா வேளையில் வேண்டுமாகாரந்திணித்து வளர்த்தலினும் சற்பத்திரர்களாக்கும் மார்க்கந் தேடப் பணிகின்றோம். எப்பணியினும் அப்பணியியற்ற முற்கூடும் எம்மை கற்குடி பிறந்தார் மக்கள் போல் ஆக்குவிப்பது மாவாகியதம் கடனன்றோ? நூற்போல் சேலை; தாய் போல் பிள்ளை யென்றன்றோ உலகம் புகலும்? எங்களது வழியே தங்களின் வழியாயும், தங்களின் வழியே எமதின் வழியாயுமிருக்கும் நிலையில் தம்பாற்பட்ட கடனையுனினிப்பாரும். யார்க்குங் குற்றமில்லாது கடத்தற்கு அருமருந்தாயுளது அன்பொன்றேயன்றோ? மொழியும் மனமும் செயலும் அன்புருக் கொண்டிருந்திடில் ஆக்கமிழைத்திடும் மார்க்கம் பிறிதொன்றில. ஆகின், அன்பிற்றிகழுங்கள். அன்புருக் கொள்ளுங்கள். அன்புமயமாகுங்கள். அன்பை நிகர்த்ததொன்றில. அன்பே யாம் கோரும் சிவம்.

---

## ஸத்திய தரிசனம்.

## மகாத்மா காந்தியின் ஜீவியசரித்திரம்.

2-ம் பாகம்.

அத்தியாயம் 16.

மகாத்மாகாந்தி தமது அனுபவங்களை "யௌவன இந்தியா" பத்திரிகையில் எழுதி வருவதில் 2-வது பிரிவு 16-வது அத்தியாயம், பின் வருமாறு:—

அப்தல்லாஸேட்டின்வழக்கு முடிந்தபின் பிரிடோரியாவில் நான் தாமதிக்க யாதொரு காரணமும் இல்லை. ஆகையால் டர்பனுக்குத் திரும்பிச் சென்று, இந்தியாவுக்குப் புறப்பட ஏற்பாடுசெய்துகொண்டிருந்தேன். ஆனால் எனக்குப் பிரிவு உபசாரம் செய்யாமல் அப்தல்லா ஸேட் என்னை ஊருக்கனுப்பக் கூடியவரல்லர். ஆகையால் ஸைடன்ஹாம் என்ற விடத்தில் எனக்கு ஒரு விருந்து நடத்திவைக்கப்பட்டது. ஒரு நாள் பூராவையும் அந்த விடத்தில் செலவிடுவதென்று ஏற்பாடாயிற்று. அங்கு நான் சில பத்திரிகைகளைப் படித்தேன். "இந்தியரின் ஓட்டுரிமை" என்ற மகுடமிட்டு ஒரு மூலையில் ஒரு செய்தி பிரசுரமாகியிருந்தது. நேட்டால்சட்டசபைத்தேர்தலில் இந்தியர் ஓட்டுச் செய்ய அதுவரையிருந்த உரிமையைப் பறிமுதல் செய்வதற்காக ஒரு மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறதென்று அதில் நான் வாசித்தேன். ஆனால் அந்த மசோதாவைப்பற்றிய விவரங்கள் எனக்குத் தெரியவில்லை. விருந்துக்கு வந்திருந்த மற்றவர்களுக்கும் தெரியவில்லை.

அப்தல்லா ஸேட்டை விசாரித்தேன். அவர் எங்களுக்கு என்னதெரியும்? வியாபாரத்தைப் பாதிக்கக்கூடிய விஷயங்கள் மட்டும் எங்களுக்குப்புரியும்; ஆரஞ்சு மாகாணத்தில் எங்களுக்கு இருந்த வியாபார வசதிகளெல்லாம் போய்விட்டன; நாங்கள் என்ன கிளர்ச்சிசெய்தும் பயனில்லை; நாங்கள் படிப்பு வாசனையில்லாத முடங்கள்; மார்க்கட்டு விகிதங்களைப் பார்ப்பதற்காக நாங்கள் பத்திரிகை படிக்கிறோமேயன்றி, மற்றப்படி அவற்றால் எங்களுக்கு உபயோகமில்லை; சட்டத்தைப்பற்றி எங்களுக்கு என்னதெரியும்? ஐரோப்பிய அட்டர்னிகள் தான் எங்களுக்கு குருவாக விளங்குகின்றனர் என்று தெரிவித்தார். "படித்த இந்தியர்கள் உங்களுக்கு உதவிபுரிய மாட்டார்களா" வென்று நான் கேட்டேன். "படித்த இந்தியர்கள் பலர் இங்கு இருப்பது உண்மைதான். ஆனால் அவர் எங்களண்டை வருவதில்லை; அவர்களை நாங்கள் பொருட்படுத்துவதில்லை; அவர்கள் கிறிஸ்தவர்களாகையால் கிறிஸ்தவ குருமார்களின் இஷ்டப்படி ஆடுகிறார்கள்; அந்த வெள்ளைக்கார குருமார்களோ கவர்ன்மெண்டின் இஷ்டப்படி ஆடுகின்றனர்" என்று அப்தல்லா ஸேட் சுட்டிக்காட்டினார்.

உண்மை இன்னதென்று நான் உடனே அறிந்துகொண்டேன். இந்தியக் கிறிஸ்தவர்களை ஒழுங்குப்படுத்த வேண்டுமென்று எனக்குப்பட்டது. கிறிஸ்தவர் என்பதற்காக இந்திய உணர்ச்சியையே அவர்கள் விட்டுவிடுவதா? ஓட்டுப்பறிமுதல்மசோதா சட்டமானால் உங்களுடைய கஷ்டம் அதிகரித்துவிடும் என்றும், இந்தியரின் சுயமதிப்புக்கு ஆபத்து வந்து விடுமென்றும் அப்தல்லா ஸேட்டினிடம் சொன்னேன்.

அப்தல்லா ஸேட் அந்த ஓட்டுரிமை விஷயமாகப் பின்வருமாறு தெரிவித்தார்:— "எங்களுக்கு ஓட்டுரிமையைப் பற்றி ஒன்றுமே தெரியாதிருந்தது. ஆனால், எங்களுடைய அட்டர்னிகளில் ஒருவரான எஸ்காம்பி என்றவர் ஒரு பெரிய சண்டைக்காரர். அவருக்கும் துறைமுக இஞ்ஜினீருக்கும் எலக்ஷனில் போட்டியேற்பட்டது. எஸ்காம்பி எங்களிடம் வந்து, எங்களை ஓட்டர்களாகப் பதிவுசெய்து கொள்ளும்படி செய்தார். நாங்கள் அவருக்கே ஓட்டுக் கொடுத்தோம். இதிலிருந்து எங்களுக்குஓட்டுரிமையால் அதிக பிரயோஜனமில்லையென்று நீங்கள் அறிந்து கொள்ளலாம். இந்த சமயத்தில் நீங்கள் என்ன சொன்னாலும் கேட்கத் தயார்" என்றார்.

நான் ஊருக்குப்போகக்கூடாதென்றும், அங்கேயே ஒரு மாதம் இருந்து போராடவேண்டுமென்றும் விருந்துக்கு வந்திருந்த மற்றவர்கள் கேட்டுக் கொண்டார்கள். "ஆமாம், ஆமாம், காந்திபாயை விடக்கூடாது" என்று எல்லாரும் அப்தல்லா ஸேட்டைப் பார்த்து ஒரு முகமாகக் கூறினார்கள். அப்தல்லா ஸேட் கெட்டிக்காரர். "நான் அவரை இங்கிருக்கும்படி நிர்ப்பந்திக்கமுடியாது. எனக்குள்ள உரிமை உங்களுக்குமுண்டு எல்லாரும் சேர்ந்து அவரை இங்கு தாமதிக்கும்படி கேட்டுக் கொள்வோம். அவர் பாரிஸ்டர். அவருக்கு பீஸ் கொடுத்தாக வேண்டும்" என்று ஸேட் சொன்னார். வக்கீல் 'பீஸ்' என்றவார்த்தை என் காதில் விழுந்ததும் எனக்கு வருத்தமாகப் போய்விட்டது. "எனக்கு பீஸ் வேண்டாம். பொது நல ஸேவைக்குப் பணம் வாங்குவதுண்டா? நான் உங்களுடைய ஊழியராக இங்கு இருந்து வேலை செய்யத் தயார். எல்லா நண்பர்களும் என்னோடு ஒத்துழைப்பதாயிருந்தால். இன்னொருமாதம் இங்கு தாமதித்திருக்க ஆக்ஷேபமில்லை. நாம் செய்யவேண்டியிருக்கிற வேலைக்குப் பணமில்லாமல் முடியாது. தந்தி யனுப்பப்பணம் வேண்டும். துண்டுப் பிரசுரங்கள் வெளியிடவேண்டும். சுற்றுப்பிரயாணம் செய்யவேண்டியிருக்கும். உங்கள் தேச சட்டங்கள் எனக்குத் தெரியாதாகையால் சட்ட புத்தகங்களை நான் வாங்கிப் படிக்க வேண்டும். இதற்கெல்லாம் பணமில்லாமல் முடியாது. எனக்கு எல்லாருடைய ஒத்துழைப்பும் அவசியம்" என்று தெரிவித்தேன். 'அல்லாஹோ அக்பர்' என்று பலரும் முழக்கம் செய்து தங்கள் சம்மதத்தைத் தெரிவித்தனர். பணத்துக்கும் ஆளுக்கும் குறைவில்லை யென்று எனக்குத் தைரியம் கூறினர்.

கடைசியில் அவ்விருந்துக் கச்சேரியை ஒரு காரியக் கமிட்டியாகத் திருப்பிவிட்டேன். விரைவாக விருந்தை முடித்துக்கொண்டு வீடுபோய்ச் சேர்ந்தோம். மேலே நடக்கவேண்டிய போராட்டத்திற்கான ஏற்பாடுகளைப் பற்றி நான் திட்டம்போடத் தொடங்கினேன். ஓட்டர் ஜாப்தாவில் யார் யாருடைய பெயர் இருக்கிறதென்று விசாரித்துத் தெரிந்துகொண்டேன். 1-மாதகாலம் அங்கு தாமதிக்கத்தீர்மானித்தேன். தென்னாப்பிரிக்காவில் நான் பின்னிட்டுப் பல வருஷம் வாழக் காரணமாயிருந்ததெல்லாம் இச்சம்பவந்தான். இந்தியரின் சுயமதிப்பைக் காப்பதற்கான போராட்டம் அன்று ஆரம்பித்துவிட்டது.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection



# மெய்வாழ்க்கை கண்டறிந்த வேந்தன்.

## புத்தர் ஞானம்.

(முருகதாஸன் எழுதுகிறார்)

இப்படியாக சிலர் ரதத்திற்கு முன்னேடி வெண் பரிகளின் கழுத்தில் மாலைகளை சூட்டினர். சிலர் அவைகளுக்குத் தின்பண்டங்கள் கொடுத்து ரதத்தைச் சுற்றி இளவரசருக்கு ஜே! ஜே! என்று கூவி ஆரவாரித்தனர். இவ்விதமாக இளவரசன் நகர் சுற்றிவந்தான். அரசனது சட்டளைப்படி நகரெங்கும் மலர்ந்த முகங்களாயிருந்தன. ஆயினும் விதியை வெல்ல யார் வல்லார்? பாதையில் போய்க்கொண்டிருக்கும்பொழுதில் தான்மறைந்திருந்த குடிசையிலிருந்து வெளிப்பட்டு மெல்லமெல்லத் தள்ளாடிக்கொண்டு மாமிச மில்லாத எலும்புகளின் மேல் ஒட்டிக்கொண்டு திரைந்திருக்க தோலையுடைய மிக்க வயது சென்ற ஒரு கிழவன் நடுவீதியில் நகர்ந்துவந்தான். அவன் முதுகு கூனியிருந்தது. கண்கள் துருப்பிடித்துச் சிவந்திருந்தன. மிகவும் குழி விழுந்து மங்கியிருந்தன. பற்களற்றதாடைகளை அடித்துக்கொண்டு தேகமெல்லாம் நடுக்கமெடுத்தது. மார்பெலும்புக்கோர்வை வெளியில் தெரிந்தது. மேலும் பெரும்மூச்சு திணறிக்கொண்டொருண்ணு கோலுடன் நடுவீதியில் நின்று ஜனங்களைப்பார்த்து பரிதாபத்துடன் பிச்சை கேட்டான். அதற்குள் இருமல் வந்து மார்பை அடைத்துவிட்டது. ஆயினும் ஒருகையை நெஞ்சில் வைத்துக்கொண்டு, ஒருகையைநீட்டிக்கொண்டிருந்தான். அப்போது அங்கிருந்தவர்கள் இளவரசன் அவன்வருவதைப்பார்க்கவில்லையானால் அவனை உன் குடிசைக்குப்போ என்று உதைத்துத்தள்ளியிருப்பார்கள்; ஆனால் இளவரசன அவர்களைப் பார்த்துக்கையமர்த்தி சாரதியைப்பார்த்து "சன்ன! இவ்வுருவம்யாது? மனிதனைப்போல்த் தோன்றியபோதிலும் மற்றமனிதர்களைப் போலல்லாமல் எவ்வளவோ விகாரமாயும் பயங்கரமாயுமிருக்கிறது. இப்படியும் மனிதர் பிறக்கிறார்களா? அவன் எலும்புகள் வெளியிற்றெரிகிறதே! ஆகாரங்கிடைப்பதில்லையா? வேறுயாது நேரிட்டது!" என்றுகேட்க,

அதற்கு சாரதி, "அரசே! இவன் வயது சென்ற மனிதனேயன்றி வேறல்ல. எண்பது வருஷத்துக்கு முன் இவன் நம்மைப்போல் பிரகாசித்திருப்பன். இப்போது எண்ணெயெல்லாம் எரிந்து திரி கரிந்ததுபோல் அவனது ரசமெல்லாம் வற்றி ஒரு சிறிது பொறிமாத்திரம் நிற்கிறது. மூப்பு வரும்போது இப்படித்தானிருக்கும். நீங்களே இதைக் கவனிக்கவேண்டும்" எனச் சொன்னான். அப்போதிளவரசன் இம்மாதிரி மூப்பு அபூர்வமோ அன்றி எல்லோர்க்கு முண்டோவென்றான். அதற்கு சாரதி என்ஐய! இங்கு நிற்பவர் எல்லோரும் அவ்வளவு காலம் ஜீவித்தால் அப்படித்தானவார்களென்றான். இளவரசன் மறுபடியும், நானும் என் யசோதையும் எண்பது வருஷமிருந்தாலிப்படித்தானோவென்றான் சாரதி ஆமென்றான். அப்படியானால் ரதத்தைத் திருப்பு; வீட்டிற்குப் போவோம்; நான்பார்க்கத்தகாததைப் பார்த்துவிட்டேன் என்றான்.

அன்றுமுதல் இளவரசனுடையமனசு இதிலேயே சென்று கொண்டிருந்தது. விருத்தாப்பியமடைந்த காலத்தில் இப்போதைய சுகானுபோகங்களெல்லாம் ஒன்றுமிராமற்போவது நிச்சயம்; அரசன் நமக்கு இன்பத்தையும் ரம்மியத்தையுமே காட்டி மற்றதை மறைத்து வந்திருக்கிறார் என்று நினைத்து, ஒரு நாள் அரசனிடம் சென்று, என் தந்தையே! எனக்கு நம் நகரை இன்னுமொருதரம்பார்க்க அனுமதிவேண்டும். ஆனால் நீங்கள் ஒன்றும்தயார்செய்யக்கூடாது; நானும்சாரதியும் யாறு வேடம்பூண்டு நாம ஆளும் நகரைப் பார்ப்போமென்று சொல்ல அரசனும் அனுமதிகொடுத்து விட்டான்.

மறு நாட்காலையில் இளவரசனும் சாரதியும் வியாபாரிகளைப்போல் வேடம்பூண்டு வெளியே புறப்பட்டார்கள். நகரத்துட்சென்று ஜனங்களுடன் கலந்து நன்மை தீமைகளை அறிந்து சென்றார்கள். ஒருபக்கம் வாசலில் கோலமிட்டுக் கொண்டிருந்தார்கள். ஒரு பக்கம் கொள்பவரும் கொடுப்பவரும் சரக்குகளை நயம் மிதமென்று சண்டைபோட்டுக் கொண்டிருந்தார்கள். தரகர்கள்சாமர்த்தியங்களைக்காட்டி நின்றார்கள். பெண்கள் தண்ணீர்க் குடங்களைக்கொண்டு வம்பு பேசிக்கொண்டு சென்றார்கள். பார வண்டிகளை மாடுகள்சுமக்கமுடியாமலிழுத்துக் கொண்டிருந்தன. இப்படி பல விதக் காட்சிகளையெல்லாம் பார்த்துக் கொண்டு சில வியாபாரிகள் நம்மைப் பார்க்கிலும் பணக்காரர்களில்லையென்றும், பணம் சம்பாதிக்கிறஅறிவிலும் மற்றெவ்வகையிலும் நமக்கு நிகரில்லையென்றும் மமதைமேலிட்டுப் பேசிக்கொண்டிருக்கும் குசாலையும் பார்த்துக்கொண்டு நகரமதில்களைத் தாண்டி நதியண்டை போய்ச்சேர்ந்தார்கள்.

அப்போது தொத்துநோய்கொண்ட ஒருவன் கீழே விழுந்து ஐயா! என்னை ரக்ஷியுங்களென்று கத்தினன். அவன் காக்கை வலிப்பினால் விகாரமாய்க் காணப்பட்டான். மெதுவாய் எழுந்திருக்கப்பார்த்தான். மறுபடியும் கீழேவிழுந்து பெருமூச்சு விட்டு ஐயோ வென்றலறிக்கொண்டு சாய்ந்தான். உடனே இளவரசன் ஓடி அவனை மடி மீது தூக்கிவைத்து இன்சொற்கூறி கண்பா, உனக்குயாது நிங்கு நேரிட்டது? ஏன் உன்னால் எழுந்திருக்கமுடியவில்லை? சன்ன, ஏன் இவன் இப்பாடுபடுகிறான்? அந்தோ! என்ன காட்சி!! ஆகா!!! சாரதி, என்ன என்ன சொல் என்றான். சாரதி "என் ஐய! ஏதோ இவன் தொத்துவியாதியால் வருந்துகிறான். முன் இவன் சரியாகவிருந்தான்; இப்போது இவன் நாடியோட்டம்மாறி இரத்தம் கொதித்துக் குதித்துக் கொண்டோடுகிறது. பல தொடங்கிவிட்டது. ஆகையாலிவனை நீரிப்படிவைத்துக் கொண்டிருப்பது சரியல்ல. வியாதி உம்மையும் தொடர்ந்தாலும் தொடரும்" என்றான்.

அதற்கரசன், இவனைப் போலின்னும் பலருண்டோ வெனக்கேட்க, சாரதி கொற்றவா! இது பலவிதத்தில் அநேகரை வாதமென்றும், கபமென்றும், சுரமென்றும், ஜன்னியென்றும், குஷ்டமென்றுமாக எல்லா மனிதர்களையும்வருத்துவது சகஜமென்றான். இளவரசன் இவ்வியாதி கவனிக்கப்படாமல் வருகிறதோவென்றான். சாரதி செடிமறைவிலிருந்து தாவும் புலிபோல்ப் பாவுகிறதென்றான். மனிதர்கள் இதற்குப்பயந்து தான் வாழ்கிறார்கள்; எனவே நான் இன்று சுகமாக உறங்குவேன் நாளை க்ஷேமமாக எழுந்திருப்பேன் என்று சொல்ல முடியாதோ எனவே, சாரதி அதற்கு ஆம என்றான்.

ஆயின் இப்படிப்பட்ட கஷ்டங்களால் முடிவென்ன? வருந்திவருந்து கடைசியில் சகிக்க முடியாமற்போனால் பிறகு என்னமாவார்கள் என்று கேட்க, சாரதி இறப்பார்கள் என்றான்.

இறப்பதாவது என்னவென்று ஆச்சரியத்துடன் இளவரசன் தலையை நிமிர, ஆம் கடைசியில் வருவது மரணம்; எப்படியாவது எச்சமயத்திலாவது எல்லாரும் இறப்பது உறுதி; அதோ இறந்தவனைப்பாருங்கள் என்று நதியைச்சுட்டிக்காட்டினன்.

---

யோகம் செய்தால்
தேகம் கெடாது,
மோகம் வராது,
சோகம் இராது.

# பலதிரட்டு.

### மறுபடியும் வெள்ளம்.

கொண்டன் காங்கில் நாப்லிக்கிற்கு 5 மைல்களுக்கப்பாலுள்ள பின்லேக் கிராமத்தில் செப்டம்பர் முதல் சேதி பெய்த கனத்தமழையின் பயனு, பெருங்வெள்ளம் ஏற்பட்டு அந்தக்கிராமமே அடியோடு அடித்துக் கொண்டு போகப்பட்டது.

### சட்டசபைக்கடைசிக்கூட்டம்.

பர்மாசட்டசபையின் கடைசிக்கூட்டம் 7—9—26-ல் நடைபெற்றது. இன்று பல உபகிரமண்டுகள் அனுமதிக்கப்பெற்றன. பர்மியால்லாதீவர்களில் குற்றம் செய்தவர்களை வெளியேற்றும் சட்டத்திருத்த மசோதா அங்கீகரிக்கப்பட்டது, திருத்தத்தின்படி இ. பி. கோ. 121, 121, ஏ., 122, 123, 124, 124, ஏ. ஆகியபிரிவுக்குட்பட்ட அரசியல் குற்றங்கள் சட்டத்தினின்றும் விலக்கப்பட்டன. இத்திருத்தத்தை இந்தியசங்கத்தினர்கள் பாராட்டினார்கள். இத்துடன் அடுத்த தேர்தலுக்கு கவர்னர் சபையைக் கலைத்துவிட்டார்.

### கைது செய்யப்பட்டனர்.

வங்காளத்தில் ஒரு கூட்டத்தினர் கைத்துப்பாக்கிகளுடனும் மற்றும் ஆயுதங்களுடனும் கொள்ளையடிப்பதற்காக ரயில் ஏறி, பார்வொன் என்ற விடத்திற்குச் செல்லுவதாக அறிந்த போலீஸார் பின் தொடர்ந்ததில் மூன்று ஆசாமிகள் மட்டுந்தான் அகப்பட்டனர். கத்தி, முதலிய சாமான்களும் இருந்தனவென்று நல்லத்தாச்செய்தி ஒன்று கூறுகிறது.

### துப்பாக்கிப் பிரயோகம்.

பஞ்சாப்பில், டோராஇஸ்மல்கான் ஜில்லாவிலுள்ள, இஹாரிலாவா என்ற கிராமத்தில் மௌல்விஷாவஸ் என்றவர்ப் பக்கபிரதேசங்களுக்கு மிகுந்த உபத்திரவம் கொடுத்துகொண்டிருந்ததால், ஷியாருக்கு 144-வது பிரிவு தடையுத்தரவை பிறப்பிப்பதற்காக ஒரு ஸப்இன்ஸ்பெக்டருடன் போலீஸ் தொகுதி ஒன்று சென்றது. ஷிநாவஸைச்சேர்ந்தவர்கள் போலீஸ் கிராமத்திற்குள் நுழையாதபடி கல்லெறிந்து கொண்டிருந்தார்கள். இதனால் போலீஸார் ஓட்டம் பிடிக்க வேண்டியது ஏற்பட்டது. இது எதிரிகளுக்கு ஊக்க மூட்டவே கல்லால் அடிப்பது அதிகப்பட்டது. அதன் மேல் போலீஸார் தற்காப்பிற்காக துப்பாக்கிப் பிரயோகஞ்செய்தார்கள். இதனால் ஒருவர் இறந்தார்; பலர் காயப்பட்டனர். ஜில்லா டிப்டி கமிஷனர் ஸ்தலத்திற்குச் சென்றிருக்கிறார்.

### கையில் காசில்லாமல் செய்தவேலை.

ஜெர்மனியில் ஆகஸ்டு 19-உயன்று லேர்டேயென்ற விடத்தில் ரயில் தண்டவாளங்கள் பெயர்க்கப்பட்டுப் போனதினால் வண்டிகள் ஓடும் வேகத்தில் கீழே யிறங்கி, பலத்த சேதப்பட்டன. பின்னால் இதற்குக் காரணங் கண்டு சந்தேகத்தின் மேல் இருவர் கைதுசெய்யப்பட்டனர். அவர்கள் தாங்கள் தான் தண்டவாளத்தை கர்த்தியதென்று ஒப்புக்கொள்ளும்போது கீழ்கண்ட காரணங்களைச் சொல்லுகிறார்கள். அதாவது தங்களுக்கு வேலையில்லாமல் போய்விட்டதென்றும் கையில் ஒரு காசுகூட வில்லை என்றும் ஆகையால் ரயிலை நிறுத்தி கொள்ளையடிக்கலாமென்று தாங்கள் நினைத்ததாகவும் ஆனால் ரயில் முறிந்து விழுந்தகாட்சி பரிதாபமாயிருந்ததால் கொள்ளையடியாது சென்று விட்டதாகவும்கூறினார்களாம்.

### மசூதிமுன் மேளம்.

காஸிப்பூரைச் சேர்ந்த சில ஹிந்துக்கள் பொது ரஸ்தாவிலுள்ள மசூதிமுன் மேளம் வாசிக்கவும் மற்றக் காரியங்கள் செய்யவும் உரிமை யுண்டென்று அலகபாத் ஹைகோர்டில் வழக்குத் தொடர்ந்திருக்கிறார்கள். மகமதியர்களும் எதிர்வழக்குத் தொடர்ந்திருக்கிறார்கள்.

### மலைச்சரிவு.

8—9—26-ல் காலையில் கல்கத்தா ஸிம்லா ரயில்பாதையில் ஒரு மலைச் சரிவு ஏற்பட்டிருக்கிறது. அதைச் சீர்படுத்துவதற்காக பிரபல ஏற்பாடுகள் நடைபெறுகின்றன. சீர்படும் வரையில் பிரயாணிகள் வண்டிமாற்றிச் செல்கின்றனர்.

### வெடிகுண்டு.

7—9—25-ல் இரவு 11 மணிக்கு டெக்கா கலெக்டர் ஆபீஸ் குமஸ்தாவான ஸ்ரீமான் ஜதீந்திர சக்கரவர்த்தியின் வீட்டில் ஒரு வெடிகுண்டு எறியப்பட்டது. அது அவருடைய மனைவியின் மீது தாக்கியது. உடனே ஆஸ்பத்திரிக்குத் தூக்கிச் செல்லப்பட்டாள். வெடிகுண்டு எறிந்த விஷமி யார் என்று இன்னும் தெரியவில்லை.

# மதிப்புரை.

### "வர்த்தக-தரு"

"வர்த்தக-தரு" வெனும்பெயர் பத்திரிகை வரகனேரிநம் ஸ்ரீமான் செ. ப. ஆனந்தா அவர்களின் ஆசிரியாதிபத்தியத்தின் கீழ் மதுரையினின்றும் வெளியிடப்படுகிறது. 5-8-26-முதல் சஞ்சிகை யொன்று நமது பார்வைக்குக் கிடைக்கப் பெற்றோம். நல்ல கிளேஸ் காகிதத்தில் டிம்மி சயிஸில் பதிப்பிக்கப்பெற்றிருக்கிறது. வருட சந்தா ரூ 3—0—0. வர்த்தக நிலைமையைக் குறித்தும், வர்த்தக நிலவரங்கள் குறித்தும், தொழில் பற்றியும், பொது வர்த்தமானங்கள், நாவல் பகுதி ஆகியவை தொகுத்தும் இத்தருவில் பொறிக்கப் பெற்றிருக்கின்றன.

### "கம்ம பாலன்"

இப்பெயர் கொண்டதோர் ஜாதிய மாதப் பத்திரிகையின் 4-வது இதழொன்று நமக்கு வரப் பெற்றோம். இஞ்சினியர் ஸ்ரீமான் ஆர். வெங்கடசாமி நாயுடுவாவர். கோவில்பட்டி "தக்ஷிண கம்ம மஹாஜன சங்க"த்தின் ஆதரவின் கீழ் திருத்தங்கலினின்றும் பிரசுரிக்கப் பெறுகிறது. தன் சமூக நலன் பற்றிய கட்டுரைகளாலேயே அலங்கரிக்கப்பட்டிருக்கிறது. திருமகள், கலைமகள் விளங்க சாதாரண பேப்பரில்பிரசுரமாகியிருக்கிறது. வகுப்புப் பூசல், சமூகச் சச்சரவு, மதத் துவேஷம், நிறவேற்றுமை இதுபோது தாண்டவமாடும் நம் மிந்திய நாட்டில், அவையனைத்தையு மொதுக்கி ஜாதீய சம்பந்தமான முற்போக்கொன்றையே மேற்கொண்டதானது மிகவும் போற்றற் குரியதே.

### மறுபிறப்பில் நம்பிக்கை.

உலகத்தில் மிக்க செல்வவந்தர் என்று பெயர் பெற்றவரும், போர்டு மோட்டார் தொழிற்சாலைக்குச் சொந்தக் காருமான மிஸ்டர் ஹென்றி போர்டை பத்திரிகைப் பிரதிநிதியொருவர் பேட்டிகண்டு பேசிய போது அவர்கூறியதாவது:— சிரம்பவும் சௌக்கியமாக வாழ்வது மனிதர்களுக்கு நன்மைதரக்கூடியதென்று நான் நினைக்கவில்லை. மனிதன் இந்த உலகத்திலிருப்பது அனுபவம்சேகரிப்பதற்காக. உபயோகமானது அனுபவம் தான். மனிதர்களைச் சுகமாக பஞ்சடைத்த பெட்டியில் வைப்பதுபோல் வைப்பதில் எனக்கு நம்பிக்கையில்லை. கடவுள் நாய் சுறுசுறுப்பாக இருப்பதற்காகவே ஈயைச் சிருஷ்டித்தார். அது போல துன்பமும் மனிதர்களைத் தூண்டிவிடுவதற்கே. நமக்கு அனுபவம் உண்டாக்குவதற்குத் தான் இவைகள் இருக்கின்றன. அடுத்த ஜென்மத்திற்கு வேண்டியது தான் அனுபவம். நாம் எல்லோரும் அதற்காகத்தான் இருக்கிறோம். மனிதன் அனுபவத்தைச் சேகரித்துக்கொண்டு மேலே முன்னேற்றமடைகிறான். இந்த ஜென்மம் முடிந்தபிறகு ஆத்மா வேறு தேகத்திற்குள் பிரவேசிக்கிறதென்பதில் எனக்குநிச்சயமான நம்பிக்கையிருக்கிறது. நாம் ஒவ்வொருவரும் சில நன்மையைச் செய்து பிறகு உபயோகப் படக்கூடிய அனுபவத்தையடைய உலகில் இருக்கிறோம். மனிதனில் உள்ள ஒவ்வொரு அம்சமும் அனுபவமும் ஸ்திரமாயிருக்கும். ஆத்மா அனாதி. அதற்கு மரணம் என்பதுஇல்லை. இது கிறிஸ்தவ மதக் கொள்கையைத் தாண்டிப் போவதாயிருந்தாலும் இது தான் என் நம்பிக்கை.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection



## நாடார்குலமித்திரன்

அக்ஷய ஞு புரட்டாசி மீ ௪ உ

## சென்னைச் சட்டசபை.

தேர்தல் சம்பந்தமாக நாடார்கள் செய்ய வேண்டிய வழிகளைப் பிறகு எழுதுவதாகச் சென்ற வாரத்திற் சொல்லி விட்டிருந்தோம். சட்டசபைப் பிரவேசத்தில் மகாத்மா காந்திக்கு நம்பிக்கையில்லாதிருந்தாலும், நம்பிக்கையுடையவர்களுடைய மனோவிருப்பத்தைத் தடுப்பதற்கியலாது, அவர்களுடைய ஆசையைப் பூர்த்தி செய்யத் தாம கடமைப் பட்டிருப்பதாக இன்னும் சொல்லிக் கொண்டிருக்கிறார். எல்லோரும் அவருடைய வார்த்தையை சிரமேற் கொண்டு தேசத்திற்குழைப்பதாகச் சொல்லிக் கொண்டு எப்படியேனும் சட்டசபையில் பிரவேசிக்கப் பகீரதப் பிரயத்தனங்கள் செய்து கொண்டிருக்கிறார்கள். இது விஷயமாய் விடிந்தால் என்ன நடக்குமோ வென்ற பெருங் கவலையடையும்படியான நிலைமை வர வர வலுத்துக் கொண்டு வருகிறது. தேசத்தின் பிற்கால நிலைமை எப்படியிருக்குமென்பதை அறிய இவ்வருடத் தேர்தலை எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். இச்சந்தர்ப்பத்தை விட்டு விடக் கூடாதென்று ஒவ்வொரு வகுப்பினரும் போட்டி போட்டுப் புயந் தட்டிக் கொண்டிருக்கிறார்கள். நாடார்களுக்கு நியாயமாய் அரசாங்கத்தார் செய்துவைக்க வேண்டிய ஸ்தானம் ஒன்றிருந்தாலும் ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகள் ஜில்லாவுக் கொருவராவது வேண்டுமென்று பல தடவை எழுதி வந்திருக்கிறோம்.

தற்கால அரசியல் முறையில் ஒருவர் தேர்தலில் வெற்றி பெற்று வருவதென்றால் சாமான்யமாய்ச் சொல்ல முடியாது. முற்காலங்களைப் போல் தெய்வத்தை முன்னிட்டு, சிறு குழந்தைகளைக் கொண்டாவது, சீட்டுக் குலுக்கிப் போட்டாவது, அசரீரி வாக்கையனுசரித்தாவது, சுப சகுனங்களைக் கண்டாவது, பட்டத்து யானையைச் சோடித்துப் பாகனின்றித் தானே யனுப்பியாவது ஒருவரைத் தெரிந்தெடுக்குங் காலமில்லை. அவைகளில் நம்பிக்கையுங் கிடையாது. தற்போழ்தோ நிறைந்த பணம் வேண்டும்; சிறந்த குணம் வேண்டும்; மிகுந்த செல்வாக்கும் வேண்டும்; அவையெல்லாம் நிறைந்தவராயினும், திறமை யுடையவராயுமிருக்க வேண்டும். நாடார் சமுகத்தில் இத்தகையவர்களில் பெரும்பாலோரிருந்தாலும், அவர்களை ஆதரிக்கும் ஜனங்களும் (ஓட்டர்கள்) அதிகம் வேண்டும்; துணைவர் வேண்டும்; தீவிரமாய் வேலை செய்ய அபிமானிகள் வேண்டும். இவ்வளவும் இவ்வருட்டம் திருநெல்வேலி ஜில்லாவுக்கு அமைந்திருக்கிறது. அந்த ஜில்லாவின் கிராமத் தொகுதிக்கு ஒரு அபேட்சகராய் நிற்கும் ஸ்ரீமான் அரி. அ. சு. துரைச்சாமி நாடாரவர்களை யாவரும் நன்கறிவர். மேற்காட்டிய அம்சங்களனைத்தும் அவருக்குண்டு. நாடார்கள் ஒருவராவது தவறாமல் அவருக்கு ஓட்டுக் கொடுப்பார்கள். தேசாபிமானமுள்ள பிராமணர்களும், பிள்ளைமார்களும் அவருக்கு ஓட்டுச் செய்யக் கடமைப் பட்டிருக்கிறார்கள். இவ்வாறு பலவகையில் அவருக்கு ஆதாரிருந்து பூரணமாய் வெற்றி பெறுவாரென்று நிச்சயிக்கலாமென்றாலும், பலமான இரண்டெதிர்ப்புகளிருக்கின்றன. "உண்டுருசி கண்ட பூனை உறியை விட்டிறங்கா" தென்பதுபோல் ஸர் சிவஞானம் பிள்ளை மூன்று வருஷ மிருந்து மந்திரி வேலையும் பார்த்தும், மீண்டும் வர ஆசை கொண்டு வேலை செய்கின்றார். அதேஜில்லா போர்டு பிரஸிடெண்டு திவான் பகதூர் குமாரசாமி ரெட்டியாரவர்களும், தாம் தாராளமாகச் சங்கடமில்லாமற் சட்டசபைக்குள் செல்வதற்குச் சரியான ரோடுகளை ஏற்கனவே தயார் செய்து வைத்துக் கொண்டிருக்கிறார். ஸ்ரீமான் ரெட்டியார் வேகத்தைக் கண்டு, பிள்ளைமார் கட்சி தோற்றுப் போமோ வென்றும், ஒரு பிள்ளையாவது வர வேண்டுமென்றும் ஸர். சிவஞானத்துக்காக மற்றப் பிள்ளைமார் அபேட்சகர்கள் ஒதுங்கிக் கொள்வார்கள் போலுமிருக்கிறது. ஆகவே ரெட்டியார், பிள்ளையாகிய இருவரையும் ஒரு நாடார் எதிர்த்து வெற்றி பெற வேண்டியதிருக்கிறது. ஸ்ரீமான் நாடாருக்கு பற்பல தேசாபிமானிகளுடைய உதவி யிருந்த போதிலும் பல ஜில்லாக்களிலுமுள்ள நாடார் குலாபிமானிகள் அனைவரும் அவருக்கு உதவியாக வேலை செய்ய முன்வர வேண்டும். சென்ற தேர்தலில் அதே ஜில்லாவில் நாடார் ஒருவர் தோற்றுப் போனார். இவ்வருடத்திலேனும் வெற்றி பெற வேணுமென்ற அபிமானத்துடன் வேலை செய்ய குலாபிமானிகள் முன்வருவார்களாக. நாடார்கள் இவ்வேளையில் விழித்தெழும்ப வேண்டும். தங்கள் முழுப்பலத்தையும் காட்ட வேண்டும். தூங்குவதற்கு இது காலமில்லை. பிரிட்டீஷ் ராஜ்பத்தை ஒழித்துவிட்டு, பிராமண ராஜ்யத்தை ஸ்தாபிக்க முயலுகிறார்களென்ற சப்தம் எங்கும் செவிடுபட முழங்குகிறது. சென்னை கார்ப்பொரேஷன் அம்மன்கோவில் டிவிஷனில் டாக்டர் ஆசீர்வாத நாடாரவர்களுடைய தேர்தலில் நடந்த சூட்சிகளை நோக்கும் பட்சம், பிரிட்டீஷ் பிராமண ராஜ்யங்களை ஒழித்து விட்டு, நாயுடு ராஜ்யம் ஸ்தாபிப்பார்களோ வென்றையமுண்டாகிறது. ஆகையால் இராவணனாண்டாலென்ன, இராமனாண்டாலென்ன வென்று வாழாவிருந்து விடாமல் ஸ்ரீமான் நாடார் தேர்தலில் வெற்றி பெற வேண்டிய வேலைகள் யாவையும் எல்லோரும் செய்ய முன்வரும்படி அழைக்கின்றோம்.

நிற்க, இராமநாதபுரம், திருநெல்வேலி இரண்டு ஜில்லாக்களின் கிறிஸ்தவப் பிரதிநிதியாக முன் வந்திருக்கும் பாளையங்கோட்டை வக்கீல் ஸ்ரீமான் டானியல் தாமஸ் நாடாரவாகளை நாம் ஒருவருக்கும் அறிமுகம் செய்துவைக்க வேண்டிய அவசியமில்லை. இவர் தம் தேசத்திற்கும், தம் மதத்திற்கும், தம் குலத்திற்கும் சரியான வேலை செய்வார் என்றே நம்புகின்றோம். இவ்விரண்டு ஜில்லாக்களிலுள்ள கிறிஸ்தவ சமுகமனைத்தும் அவர்களையே தேர்ந்தெடுப்பார்களாக. இவருக்குப் போட்டியாக தஞ்சை ஜில்லா பார் அட்லா மிஸ்டர் பன்னீர்ச் செல்வத்தை நிறுத்தப் போவதாகவும், அவருக்கனுமதியாக குருக்கள்மார்களும், பல பிரமுகர்களும் ஏற்கனவே வேலை செய்து கொண்டிருப்பதாகவும் கேள்விப் படுகிறோம். மிஸ்டர் பன்னீர்ச் செல்வம் எவ்வளவோ நல்லவரென்று சொல்லப்பட்டாலும், இரண்டு ஜில்லாவிலுள்ள கிறிஸ்தவ பேதாவிகளுக்கு அவ்வளவு பெருமை தராதென்பதை நாம் சொல்ல வேண்டியதில்லை. ஆகையால் இவ்விரண்டு ஜில்லாக்களின் கிறிஸ்தவ சமுகத்தார் தங்கள் சுய மரியாதையைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டுமானால் தங்கள் ஜில்லாவிற பிறந்து வளர்ந்த தகுதியான ஸ்ரீமான் டானியல்தாமஸ் அவர்களையே தெரிந்தெடுப்பார்களென்று நம்புகின்றோம். கிறிஸ்தவ நாடார்களெல்லாம் குல மத அபிமானங் கொண்டு அவருக்கு ஒத்தாசை செய்து வெற்றி பெறுவார்களாக.

அபேட்சகராக நிற்கும் இரண்டு நாடார்களும், தங்களுக்குச் சாதகமிருக்கிறதென்றுவது, சாதகம் செய்கிறோம் என்று சொல்லும் சில மாயக் காரர்களின் வார்த்தைபை நம்பியாவது வாழாவிருந்து விடாமல் தங்கள் கடமையை இடைவிடாமற் செய்து வருவார்களாக.

ஜஸ்டிஸ் கட்சியின் சார்பாக கனம் பணகால் ராஜா, இராமநாதபுரம் ராஜா, ஸ்ரீமான் முதலியார் முதலிய பிரமுகர்கள் தென்னாட்டுக்கு வரப்போவதாகத் தெரிவதால், நாடார் பிரமுகர்கள் அவர்களுடைய மனப்பான்மையை அறிய வேண்டும். நாடார்களுக்காக மற்றொருவர் அவர்களுடைய மனதைச் சோதிப்பதைப் பார்க்கிலும் நாடார்களே அவர்களைச் சோதித்து நேரில் நாடார்களுடைய நியாயமான உரிமைகளை வற்புறுத்தலாம். ஆகையால் நாடார் மகாஜன சங்க நிர்வாகிகளும், பிரமுகர்களும் சட்டசபை சம்பந்தமாக ஜஸ்டிஸ் கட்சியார் மனப்பான்மை யென்னவென்றறிவதிற்றயங்கி விடக்கூடாதென்பதை மீண்டும் வற்புறுத்துகின்றோம்.

## குறிப்புகள்.

### லாட்டரி.

17—9—26 பகல் 2-மணி முதல் நாடார்மஹாஜன சங்கம் லாட்டரிப் பிரைஸ் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இரவும் பகலும் இடைவிடாமல் எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். எல்லாப் பிரைஸகளும் எடுத்துமுடிய இன்னும் ஒருவாரமேனுமாகுமென்று தெரிகிறது. இதுவரையும் பெரிய பிரைஸ்கள் உதயமாகவில்லை. ரூ 2, 5, 10 முதலிய சில்லறைகளும் ரூ 25-ல் 2-ம் ரூ 50-ல் 1-ம் ரூ 100-ல் 1-மட்டும் உதயமாகியிருக்கின்றன. ஆயிரக் கணக்கான ஜனங்கள் கூடிக்கொண்டிருக்கிறார்கள. பிரைஸ்கள் வெகு நிதானத்துடன் வெளிவந்து கொண்டிருக்கின்றன. மற்றும் பின்னடக்கும் காரியங்களையும் மற்றவிர்த்தாந்தங்களையும் மறுமுறை எழுதுவோம்.

### நன்கொடை.

திருச்செந்தூர் தாலுகா, உடைப்புகுடியிருப்பு வாசியும், பொதுநலப்பிரியரும் சிலோன் எட்டியாந்தொட்டா 'நாடார்ஐக்கியசங்க' பிரசிடெண்டுமான மகா-ா-ா-ஸ்ரீ சங்கரலிங்கநாடார் அவர்கள் குமாரர் செல்வச்சிரஞ்சீவி இராமஸாமி நாடாருக்கும், தென்காசிதாலுகா புல்க்காட்டுக்கிராமம் மகா-ா-ா-ஸ்ரீ இரா. இராமஸாமிநாடாரவர்கள் புத்திரி சௌபாக்கியவதி சந்தனம்மாளுக்கும் 9—9—26-ல் எட்டியாந்தொட்டா ஸ்ரீமதி இரா. அண்ணாமலை அம்மாளவர்கள் "ஜெயலட்சுமி விலாஸ்" மாளிகையில் விவாகம் நடந்தேறிய சுப தினத்தை முன்னிட்டு மித்திரன் க்ஷேமநிதிக்கு ரூபாய் ஒன்று அனுப்பியுள்ளார்கள். அதை மிகுந்த அன்புடனேற்று வதுவரர்களை ஆசீர்வதித்து வாழ்த்துகின்றோம்.

## நாடார் மஹாஜன சங்கம், மதுரை.

### ஏழை மாணவர் ஸ்காலர்ஷிப் லாட்டரி.

அக்ஷய-ஞு புரட்டாசி மீ 1 உ (17-9-26.) பகல் 2-மணிக்கு பிரைஸ் எடுக்கப்பெறும்.

#### வரவு செலவு கணக்கு விபரம்.

| | |
|---|---|
| டிக்கெட் விற்பனை மூலம் வசூல் வரவு ரூ | 87,496-1-6 |
| காகிதம், அச்சுக்கூலி, பிரயாணச் செலவு, தபால், தந்தி, டிப்பந்திகள் சம்பளம் சில்லரைச் செலவு வகையில் கூடிய மொத்தம் செலவு... ரூ | 13,996-1-6 |
| பிரைஸ்களுக்கு கொடுக்க பணம் ரூ | 35,000...... |
| தனிப்பிரைஸ்களுக்கு ரூ | 3,500...... |
| ஸ்காலர்ஷிப் நிதிக்கு ரூ | 35,000...... |
| ஆக பற்று ரூ | 87,496-1-6 |

முன்னால் தீர்மானித்தபடி, இரண்டு லக்ஷம் டிக்கெட் விற்பனை யாகாதபடியால் கீழ்கண்ட பிரகாரம் பிரைஸ்கள் கொடுக்கத் தீர்மானிக்கப் பெற்றிருக்கிறது.

| | | | |
|---|---|---|---|
| ரூ | 5000-யில் | 1 | பிரைஸ் |
| ரூ | 2500-யில் | 1 | ,, |
| ரூ | 1000-யில் | 1 | ,, |
| ரூ | 500-யில் | 2 | ,, |
| ரூ | 250-யில் | 5 | ,, |
| ரூ | 100-யில் | 15 | ,, |
| ரூ | 50-யில் | 20 | ,, |
| ரூ | 25-யில் | 40 | ,, |
| ரூ | 10-யில் | 200 | ,, |
| ரூ | 5-யில் | 1000 | ,, |
| ரூ | 2-யில் | 6875 | ,, |

லாட்டரி கமிட்டி.

### கவர்ன்மெண்டு உத்தியோகங்கள்.

#### டிப்டி சூப்பிரண்டேண்டேண்ட் ஆப் போலீஸ்.

மதுரை வக்கீல் ஸ்ரீமான் ஞானவொளிவுநாடார் பி. ஏ. பி. எல். அவர்களின் திருக்குமாரர் ஸ்ரீமான் தினகர் ஞானவொளிவு பி. ஏ ஆனர் கவர்ன்மெண்டாரால் நடைபெற்ற போலீஸ் டிப்டி சூப்பிரண்டெண்டெண்ட் பதவி ஸெலக்ஷனில் தேர்ந்தெடுக்கப் பெற்றிருக்கிறதாகக் கேள்விப்பட்டு சந்தோஷமடைகிறோம்.

#### ஜில்லா முன்சிப்

இம்முறை நடந்த ஜில்லா முன்சிப் ஸெலக்ஷனுக்கு சுமார் 240 பேர்கள் வரை விண்ணப்பித்திருந்ததில் 20 பேர்களே ஹைகோர்ட் ஜட்ஜுகளால் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். அதில் நமது பால்யஅபிமானியும், கடையம் வாசியும் திருநெல்வேலிப் பிரபல வக்கீலுமான ஸ்ரீமான் வி. சுப்பிரமணிய நாடார் அவர்களுமொருவரென அறிந்து மகிழ்வெய்துகிறோம்.

### பின்வந்த செய்தி.

மதுரை நாடார் மகாஜன சங்கம் ஸ்காலர்ஷிப் லாட்டரியில் கும்பகோணம், பேட்டை சு. சௌரிராஜுலு செட்டியாரவர்களுக்கு 2-வது பிரைஸ் 2500 ரூபாய் உதயமாகி யிருக்கிறதாக தகவல் கிடைத்திருக்கிறது.

## சமீபித்து விட்டது.

### சென்னை சட்டசபைத் தேர்தல்.

### திருநெல்வேலி ஜில்லா நாடார்கள் கவனிக்க வேண்டும்.

(பெ. திருமேனிநாதன்.)

(முன் தொடர்ச்சி.)

சென்ற மித்திரனில் ஸ்ரீமான் துரைச்சாமிநாடாரவர்களுடைய குலாபிமானப் பெருக்கத்தையும், அவருக்குள்ள தேசப்பற்றுதலையும், தேசியத் தலைவர்களிடத்தில் நெருங்கிப்பழகி தன்குலத்தினருக்கும் தேசத்தினருக்கு முன்னா மனமாச்சரியகாரணகாரியங்களை எடுத்துரைத்து இருசாராரும் தேசத்தை முன்னிட்டு, ஐக்கியப்படவேண்டியதில் உண்மையுடன் உழைத்துக்கொண்டு வருவதையும் விவரித்தோம். இனி தற்கால தேசியராஜீய விஷயங்களை அனுசரித்து, ஸ்ரீமான் துரைச்சாமிநாடார் தேர்ந்தெடுக்கவேண்டியதின் அவசியத்தை ஈண்டு தொடருவாம்.

தற்காலத்தில் ராஜீய தேசிய நிலைமையானது அடிக்கடி மாறிக்கொண்டிருக்கிறது. பல பல புதுக்கட்சிகள் தோன்றிக் கொண்டிருக்கின்றன. ஒவ்வொன்றும் ஒவ்வொருவகையில் தேசமகாஜனங்களின் கவனத்தைக் கவர்ந்து கொண்டிருக்கின்றது. தேசநலத்தைக் காட்டிக்கொண்டு கட்சிப்பிரதிகட்சிகள் புதிது புதிதாகத் தோன்றிக்கொண்டிருந்தாலும், அவர்கள் தங்கள்வகுப்புநலத்தையும்ஜாதியபிமானத்தையும் துறந்தபாடில்லை. இருதய சுத்தியில்லாமல் அந்தரங்கத்தில் சுயநல அழுக்கு அடைந்திருப்பதுதான், புதிய கட்சிகளின் தோற்றுதலுக்குக் காரணமாயிருக்கின்றது. கட்சியின்நோக்கங்களும்,ஹேதுக்களும் நிர்மலமாகக் காணப்பட்டாலும அநுஷ்டானத்தில் அப்படியில்லை. கட்சிப்பிரதிகட்சிகளின் கோஷ்டமுர் சுயநல சூழ்ச்சிகளின் சோரமும் மிகுந்த இக்காலத்தில் நமக்குப் பிரதிநிதியாகக் கொள்ளப்படும் ஒருவரின் யோக்கியதையை நாம் கவனிக்கவேண்டியதவசியமல்லவா? தற்கால ராஜீய தேசியப் போக்குகளில் சங்கையாடியவராயிருப்பதோடு, நம் ஜாதிக்கு உழைக்கும் பொறுப்பில் பலகெடுதக் கொள்ளக்கூடிய வராகவுமிருக்க வேண்டியதிருக்கிறது. இத்தகையோருக்குத்தான தேசப்போக்கில் நம் ஜாதியின் முற்போக்கை இணைத்து இழுத்துக்கொண்டு வரமுடியும். ராஜீய தேசிய விஷயங்களின் நுட்பமில்லாதவர்களுக்கு ஜாதிய முற்போக்குக்கு வழிகாட்டுவதென்றால் மகாக்கஷ்டமாகும். காலதேச வர்த்தமானங்களுக்குத் தக்கபடிதான் ஜாதிய முன்னேற்றத்திற்கும் திட்டம்போட வேண்டியதிருக்கிறது. ஆகவே இது சமயம் சகல விஷயங்களிலும்பொருத்தம் மிகுந்த ஸ்ரீமான் துரைச்சாமிநாடாரையே தேர்ந்தெடுக்கவேண்டியது திருநெல்வேலிஜில்லா நாடார்களின் கடமையாகும்.

ஸ்ரீமான் துரைச்சாமிநாடார்சுயராஜ்யக் கட்சியின் சார்பாக நிற்கிறாரென்ற அபிப்பிராயபேத நினைப்பு நம்மில் யாருக்கும் வேண்டியதில்லை. ராஜீய தேசிய விஷயங்களில் அமிதவாதக்கட்சியிலும், மிதவாதக்கட்சியிலும், ஜஸ்டிஸ் கட்சியிலும், கவர்ன்மெண்டுகட்சியிலும், காங்கிரஸ்கட்சியிலும் நம் ஜாதியினர் தங்கள் தங்கள் மனோபீஷ்டத்திற்குத் தகுந்தபடி பிரிந்து அபிமானித்து அந்தந்த கட்சியை ஆதரித்தாலுங்கூட, நம் ஜாதிய விஷயங்களில் நாம் எல்லோரும் ஒன்றுபட்டு ஒரு முகமாக அபிப்பிராயம் கொள்ளுவதுபோல் ஸ்ரீமான் துரைச்சாமிநாடாரும், எந்தக்கட்சியின் சார்பாக சட்டசபையில் வீற்றிருந்தாலும் நாடார்களுடைய பாத்தியங்களுக்கும், உரிமைகளுக்கும் பங்கம் வராமல் பார்த்துக் கொள்வாரென்பது திண்ணம்.

ஒவ்வொரு கட்சியிலும் தோன்றுபவர்கள் பெரும்பாலும் அந்தரங்கத்தில் சுயஜாதி நலங்கொண்டவர்களாயிருக்கிறார்கள். ஸ்ரீமான் துரைச்சாமிநாடாரவர்களாவது தன் குலத்தினரின் முன்னேற்றத்திற்குப் பாடுபடத்தயாராகவிருப்பதுபோல் தன் தேசத்திற்கும் பாடுபடுவேனென்று பகிரங்கமாகச் சொல்லுகிறார். ஆனால் சென்ற தேர்தலில் திருநெல்வேலி ஜில்லாவில் ஜஸ்டிஸ் கட்சியின் சார்பாக நின்று வெற்றிபெற்ற ஸ்ரீமான் மார்த்தாண்டம்பிள்ளை, நாடார்கள் ஓட்டை வாங்கும் மட்டும் கட்சித்தோரணையைத் தான் பெரிதாய் நினைப்பதாக காட்டி, கடைசியில் தன் சுய சாதி நலத்திலேயே கண் காணிப்பாயிருந்து வந்திருக்கிறாரென்றுஅவர் சமீபத்தில் சுதேசமித்திரனுக்கு எழுதிய பகிரங்கக்கடிதத்தின் மூலம் நாம் அறியக்கிடக்கிறது. அதில் நாடார்கள் திருநெல்வேலி ஜில்லாவில் ஏராளமான ஜனத்தொகையுடையவர்கள் என்பதை ஸ்ரீமான்பிள்ளை வெற்றிபெற்றபின் மறந்துவிட்டார் போல்தெரிகிறது. ஜஸ்டிஸ்கட்சியின் போக்கு தனக்கு பிடிக்கவில்லையென்று சொல்லி சட்டசபை கலைந்தபோகும் தருவாயில் அதினின்றும் விலகிக்கொண்டார். அந்த கடிதத்தில் தனக்கு வகுப்புவாதங்கள் பிடிக்கவில்லையென்றும், ஜனநாயகமுறைதான் வேண்டுமென்றும் சொல்லிக்கொண்டே நாடார், அய்யர், ரெட்டியார், முதலியார் இவர்களின் சமீபத் தேர்தல் முழக்கத்தைக்கண்டு சகியாமல் தன் ஜாதியாருக்கு அதை சுட்டிக்காட்டி தூண்டுதல் விடுத்திருக்கிறார். ஜனநாயகமொன்றையே விரும்புவதாக இயம்பும் இவர் ஜாதியபிமானம் கொள்ளும் நியாயந்தான்நமக்கு ஆச்சரியமாய்த் தோன்றுகிறது. நாடாரும் ஐயரும் சேர்ந்து வெற்றிபெற்றால் சைவப்பிள்ளைமக்களுக்கு மோசம் வந்துவிடுவதுபோல் பயப்படுகிறார். அதுபோல் இஜ்ஜில்லாவில் ஏராளமான ஜனத்தொகையுடைய நாடார்கள், நாடாரல்லாத ஒருவர் இதே ஜில்லாவில் அபேக்ஷகராய் நின்று வெற்றிபெறுவதைக்கண்டு ஏன் பயப்படக்கூடாது?

ஆனால் நாடார், அய்யர், ரெட்டியார், முதலியார் இவர்களுக்கு இதர ஜில்லாக்களில் நின்றுகொள்ள இடமிருக்கிறதாம்.

சைவப்பிள்ளைமக்களுக்கோ திருநெல்வேலிஜில்லாவை விட்டால் வேறு கதியேகிடையாதாம். ஆகையால் ஸ்ரீமான் மார்த்தாண்டம்பிள்ளையின் குலத்தாராகிய ஸர்.சிவஞானம்பிள்ளைக்குத்தான் சைவப்பிள்ளை மக்கள் ஓட்டுக் கொடுக்கவேண்டுமாம். அவர்களுக்குள் கட்சிப்பிரதிகட்சியான அபிப்பிராயங்களை நினையாமல் ஏகமாக நின்று ஸர். சிவஞானம்பிள்ளையைத் தேர்ந்தெடுக்க வேண்டுமாம். அப்படி அவரைத்தேர்ந்தெடுத்தால் பழையபடி அவர் மந்திரியாகிவிடுவாராம். அதற்கு வழியிருக்கிறதாம். என்னே இவரின் சாதியபிமானம்!

ஜஸ்டிஸ்கட்சியின் நோக்கமும் கொள்கையும் நடத்தையும் தனக்குப் பிடிக்கவில்லை என்றிருந்தி அக்கட்சியினின்றும் வெளியேறிய இவருக்கு அக்கட்சித்தலைவர்களில் ஒருவரெனச் சொல்லப்படும் ஸர். சிவஞானம்பிள்ளையை கட்சிதோரணையின்றி ஆதரிக்கும்படி தங்குலத்தோரனைவரையும் வேண்டுவது விசித்திரமாயிருக்கிறது. ஸ்ரீமான் மார்த்தாண்டம்பிள்ளை கொண்ட குலாபிமானப்பெருக்கானது இவ்வாறு முரண்பட்ட தன்மையில் எழுதச் சொல்லுகிறது. இது சமயம் அவர்பாற்றோன்றிய ஜனநாயகத்துவம் எங்குபோய் மறைந்ததோ! ஆகையால் நாடார் கனவான்களே! கட்சிகளின் தோற்றங்களைக்கண்டு மயங்காவது பயங்கொள்ளுவதாவதில்லாமல் எல்லா வகையிலும் எஸ்டிக்கெடை நின்று உழைக்கும் பாலிய உத்தமரான ஸ்ரீமான் துரைச்சாமிநாடாரைத் தேர்ந்தெடுக்க வேண்டுகிறோம்.

---

## நாடார் மக்களே!

**உஷார்! உஷார்!! உஷார்!!!**

**தேர்தல் நெருங்குகிறது!**

**சொல்லொன்று**

**எழுத்தொன்று**

**நடத்தையொன்றுமாயிருப்**

## சாயம் வெளுத்துப் போயிற்று.

(நமது ராஜீய நிருபர் எழுதுகிறார்.)

"ஜஸ்டிஸ்கட்சி நியாயமானதாயிருக்கும்; அது திராவிடமக்களைத் திரட்டும் கட்சியாயிருக்கும்; பிராமணரல்லாத எல்லோருக்கும் சமத்துவங் கொடுக்கும் கட்சியாயிருக்கு"மென்று எண்ணியிருந்தோம். ஆனால் சென்னை சட்டசபையில் இந்துமத தேவஸ்தான மசோதா வந்ததும் அக்கட்சியினரின் கொள்கையும் சுயநலப்பெருக்கும் உத்தியோக ஆசையின் நோக்கமும் வெட்ட வெளிச்சமாகிவிட்டது.

பற்பல சந்தர்ப்பங்களிலெல்லாம் பிராமணரல்லாத எல்லோருக்கும் உண்மையுள்ளதாகத் தோன்றியது. ஆனால் தேவஸ்தான மசோதா வந்ததும் அதனுடைய சுய சொரூபம் தெரிந்துவிட்டது. பிராமணரல்லாதார் எல்லோருடைய பொதுவான முன்னேற்றத்திற் கென்றும் பிராமணரல்லாத எளைய ஜாதியார்களை எல்லாம் சமத்துவமாகப் பாவிப்போமென்றும்கூறிய கட்சியார் சொன்னபடி நடந்திருக்கிறார்களா? இதை விளக்க ஈண்டு ஓர் சம்பவத்தை மட்டும் கூறுவோம். 16-9-26-ல் சென்னை சட்டசபையில் இந்துமத தேவஸ்தான மசோதாவின் பிரிவுகளில் விவாதம் நடந்துகொண்டிருக்கும்போது அடியில்கண்ட திருத்தம் கொண்டு வரப்பட்டது.

"இந்த தேவஸ்தான சட்டத்தில் வியக்தமாகக் குறிப்பிட்டுள்ளவைகளைத்தவிர இந்த சட்டத்தில் கண்ட எதுவும் மடங்கள் அல்லது கோவில்களின் பழக்கவழக்கங்களை எவ்விதத்திலும் பாதிக்காது" என்றிருக்கும் 79-வது பிரிவில் ஹிந்து மதத்தைச் சேர்ந்த எந்த சமூகத்தினரும் கோவிலுக்குள் நுழைந்து பிரார்த்தனை செய்வதைத்தடுக்கும் எந்த சம்பிரதாயம் அல்லது வழக்கத்தை ஆதரிக்கக் கூடாதென்பதைச் சேர்க்கவேண்டுமென்று கொண்டுவந்ததை மந்திரி எதிர்த்து தோற்கடித்துவிட்டார். ஜஸ்டிஸ் என்ற மந்திரி கட்சியார்தான் பூராவும் எதிர்த்து ஓட்டுக்கொடுத்தனராம். இவ்விதம் செய்தது பிராமணரல்லாதாரின் சுயமதிப்பை பாதித்ததாகுமேயன்றோ? பிராமணரல்லாதாரின் சுயமதிப்பை ஒரு பக்கம் குழி தோண்டிப்புதைத்துவிட்டு பிராமணரல்லாத சமூகத்திற்கே பாடுபடுகிறோமென்றியம்புவதின் அர்த்தம் என்ன? தெரியவில்லை. இவர்கள் தான் பிராமணரல்லாதருடைய நலத்திற்கும் சமத்துவத்திற்கும் பாடுபட்டவர்களாம்! பாடுபடுகிறவர்களாம்!! பாடுபடப் போகிறோமென்கிறவர்களாம்!!! பிராமணர்கள் தங்களுக்கு சமத்துவம் கொடுக்கவில்லை என்று போராடும் இவர்கள் இப்போது (பிராமணரல்லாதார்) தங்களுக்குள்ளே சமத்துவம் கொடுக்கத்தயங்குகிறார்கள். என்னே இக்கட்சியின் சுயநலப்போக்கு!

---

## இந்திய பர்மா திருச்சபை

4—9—1926-ல் கூடிய ஐக்கியசங்கத்தின் பொதுக்கூட்டத்தில் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேறலாயிற்று.

இந்த விசேஷித்த பொதுக்கூட்டத்தில் வந்திருக்கும் அர்ச் காபிரியேல் சபை ஐக்கிய சங்கத்தின் அங்கத்தினர் காபிரியேல் ஆலயத்தைச் சேர்ந்த சபையார், இந்திய பர்மாத் திருச்சபையென்னும் பெயருடன் இரவுகள் அத்தியக்ஷராதீனத்திற்குட்படாமலும் இங்கிலாந்து திருச்சபையின் ஆளுகையில் சேராமலும் சுயாதீனமும் சுயஅரசாட்சியுமுள்ள திருச்சபையாக இப்போது நடந்துவரும்முறையையுறுதிப்படுத்திருக்கிறார்கள்.

மேற்கூறிய முறையே இந்தப் புதுச்சபையின் நியமனங்களுக்கு மூலாதாரமாக இருக்கவேண்டுமெனவும் இம்முறையினின்று விலகுவதற்கு இந்தச் சபையை ஸ்தாபகஞ் செய்த காபிரியேல் சபை ஐக்கிய சங்கத்தின் தற்சமய அங்கத்தினருக்கேனும் இவர்களுக்குப் பின் வரக்கூடிய அங்கத்தின

ஐக்கிய சங்கத்தின் காரிய நிர்வாக சபையார் அவசியமெனத்தோன்றும் விஷயங்களில் சங்கத்தின் அங்கத்தினருடைய யோசனைகளையறிந்து மேற்சொன்ன மூலாதார முறையினின்று விலகாது சபைக்குரிய காரியங்களை உடனே ஸ்திரப்படுத்தவேண்டும். காபிரியேல் ஆலயச் சொத்துக்களைச் சபையாருக்குச் சொந்தமாக்கும் வண்ணம் செய்யவேண்டிய ஏற்பாடுகளையும், ஆலயத்திற்குக் குருமார் தட்டாதிருக்கும்படியும் பிள்ளைகள் திருவிருந்தில் முதல் முதல் சேரும்படியும் வேண்டிய ஒழுங்குகளையுஞ் செய்ய வேண்டும் என்று ஸ்ரீமான் அ. க. மா. தேவராஜ்நாடார் அவர்கள் எழுதி

## சென்னை சட்டசபை.

### திருநெல்வேலி, இராமநாதபுரம் ஜில்லா கத்தோலிக் கிறிஸ்தவ வாக்காளர்களுக்கு ஓர் விஞ்ஞாபனம்.

சகோதரர்களே!

சென்ற 1921-1923-ம் வருஷத்திய சென்னைக் கிறிஸ்தவ சட்டசபை ஸ்தானத்துக்காக ஸ்ரீமான்கள் டானியல்தாமஸ் அவர்கள் 1, ராவ்பஹதூர் குருஸ்பர்னாந்தீஸ் அவர்கள் 2, வாசர் மச்சாது அவர்கள் 3, எட்வின் பெரியநாயகம் அவர்கள் 4 இந்நான்குபேர்களும் அபேட்சகராக நின்றதில் கத்தோலிக் கிறிஸ்தவர்களுக்கும், புரோட்டஸ்டென்ட் கிறிஸ்தவர்களுக்கும் சமாதானக் குறைவு ஏற்படுமெனத் தெரிந்துகொண்ட கனவான்களில் சிலர் ஒன்று சேர்ந்து பேசி டை தடவையில் புரோட்டஸ்டென்ட் கிறிஸ்தவர்களுக்கு இடம் கொடுக்க வேண்டுமெனத் தீர்மானித்ததின் பேரில் ஸ்ரீமான் ராவ்பஹதூர் குருஸ் பர்னாந்தீஸ் அவர்களும் ஸ்ரீமான் மச்சாது அவர்களும் அபேட்சகராக நின்றதிலிருந்து விலகிவிட்டார்கள்.

பின்னர் 1924-1926-ம் வருஷங்களுக்கு டை ஸ்தானத்துக்காக ஸ்ரீமான்கள் டானியல் தாமஸ் அவர்கள் 1, ராவ்பஹதூர் குருஸ் பர்னாந்தீஸ் அவர்கள் 2, எட்வின் பெரியநாயகம் அவர்கள் 3 இம்மூவரும் அபேட்சகராக நின்றதில் முன் ஒப்பந்தப்படிக்கு கத்தோலிக் கிறிஸ்தவர்களுக்கு இடம் கொடுக்கவேண்டுமென்று தீர்மானித்து ஸ்ரீமான் டானியல் தாமஸ் அவர்கள் தம் கருத்தை வாபஸ் வாங்கிக்கொண்டார்கள். ஸ்ரீமான் எட்வின் பெரியநாயகம் அவர்கள் விலகிக்கொள்ளாதபடியால் புரோட்டெஸ்டென்ட் சகோதரர்கள் நம்மோடு சேர்ந்து உழைத்த காரணமாய் ஸ்ரீமான் ராவ்பஹதூர் குருஸ்பர்னாந்தீஸ் அவர்கள் தெரிந்தெடுக்கப்பட்டார்களென்பது நாமெல்லோரும் அறிந்த விஷயம்.

டை ஒப்பந்தப்படிக்கும் சென்ற தடவையில் நாம் கொடுத்தவாக்குப்படிக்கும் இத்தடவை ஸ்ரீமான் ராவ் குருஸ்பர்னாந்தீஸ் அவர்கள் அபேட்சகராக நிற்கவில்லை. அன்னவர்களுடைய பெருந்தன்மை நன்கு மதிக்கத்தக்கதே. கத்தோலிக் கிறிஸ்தவர்களில் வேறு எவரும் நிற்கத் துணியார்களென்பது எம் துணிபு.

ஆகவே, நம் கத்தோலிக் மத தர்மத்தைக் காப்பாற்றிக்கொள்ளவேண்டுமானால் இந்திய கிறிஸ்தவ ஒப்பந்த ஒழுங்கைமுன தடவையில்காப்பாற்றினவரும், டை தொகுதிக்குச் சிறந்த ஆபரணமாய் விளங்கி வருபவரும், எம்மதத்தினராலும் மதிக்கப்பெற்றவரும், ஜனங்களுக்குள் சொற்திறமை வாய்ந்தவரும், பாளையங்கோட்டை முனிசிப்பல் கவுன்சிலிலும், டிஸ்டிரிக்ட் சர்ச்சு கவுன்சிலிலும், கல்கத்தா கவுன்சிலிலும் அநேக வருஷகாலமாய் உத்தியோகம் வகித்து சகலருக்கும் தம்மால் இயன்ற உதவி செய்து வருபவரும், பொதுநலத்துக்காக அரும்பாடுபடுபவருமான ஸ்ரீமான் டானியல் தாமஸ் வக்கீல் அவர்களுக்கே நமது ஓட் சுதந்திரத்தைக் கொடுத்து நம்மால் கூடிய உதவிபுரிவது நமது கடமையாகும்.

ஓர் கத்தோலிக் ஓட்டர்.

# வித்தியாதானம்.

## பெரியார்களின் அருந் தொண்டு.

"அறஞ்செய விரும்பு. தானமது விரும்பு" என்பன தமிழ் நாட்டு மூதாட்டியார் ஔவைப்பிராட்டியின் அமுத மொழிகள். நம் நாட்டிற்குரிய தானங்கள் முப்பத்திரண்டெனவும் அவற்றுள்ளும் தலை சிறந்து விளங்குவது பசிப் பிணியாற்றும் அன்னதானமெனவும் அறைவர் உலகோர். "உலகம் உயர்ந்தோர் மாட்டு" எனல் தமிழ் நாட்டுப் பழமொழி. இவ் உயர்ந்தோரின் அபிப்பிராயம் அன்னதானத்தினும் அநேக ஆயிர மடங்கு சிறந்து விளங்கும் ஆற்றலுடையது கல்வி தானம் ஒன்றே என்பதாம். ஈண்டு உயர்ந்தோர் எனல் உலகிற்கு இதம் செய்தாரையே! நல்லன செய்யாதிருப்பினும் தீயன செய்யாதிருத்தலே சிறப்புடைத்தாம். தீயனவும் ஒழித்து நல்லனவும் நாட்டினுறை காட்டினர் போற்றிப் புகழல் புதிதன்று; வியப்புமன்று. இவ்வகையில் செயற்கரியவுஞ் செய்து நாட்டை உய்வித்த பெரியார்கள் நம் ஆழ்வாராசாரியர்களும் நாயன்மார்களுமாவர். "ஓதற்கெளிதாயுணர்தற்கரிதாகி வேதப் பொருளாய் மிக விளங்கித் தீதற்றோர் உள்ளுதோ றுள்ளுதோ றுள்ள முருக்கும்" உத்தரவேத முரைத்த தெய்வப் புலவரும், சகல நூற்களின் நுண் பொருளையும் சுருங்கக் கூறி விளங்கக் காட்டும் நீதி நூற்களை தமிழுலகினுக் குதவிய நல்லிசைப் புலமை மெல்லியவாராகிய ஔவைப் பிராட்டியாரும் இவ்வகையிற் சார்ந்தவர்களே. இன்னோரன்ன பெரியாரனைவரும் சில பல நூற்றாண்டுகளின் முன்னரே தமிழ் நாட்டிற்கொன்றித் தக்கன செய்தோராவர். இந்நாளிலும், காலத்திற்கேற்ற வகையில் தமிழ் நாட்டிற்கு வேண்டுவன செய்து வித்தியாதானத்தால் உபகரித்தவரும் தக்காரும் பலருளர் எனல் மிகையாகா. இக்கால வித்தியாதான உபகாரிகளுள் யாழ்ப்பாணத்து நல்லூர் ஸ்ரீ ஆறுமுக நாவலரும் ஒருவராக கற்றோரால் கொள்ளப்படுவர். இன்னாரின் வித்தியாதானத்தையும், சமூக ஊழியத்தையும், ஜீவ காருண்ய பிரசாரத்தையும் மறக்க வல்லார் யாவர்? இவ்வித்வ மணி வெளியிட்டுள்ள பல பல நூல்களுள் பாடசாலை மாணாக்கர்கட்குப் பெரிதும் பயன்படுமாறு கோலியுள பாடப்புத்தகங்கள் ஒன்றில் நம் நாட்டிற்குரிய உயரிய பெருநோக்கை விளக்குவான் வேண்டி அமைத்துள அரிய கட்டுரையிலுள்ள சில குறிப்புரைகள் வருமாறு:—

### கொலை.

கொலையாவது உயிர்களை அவைகளுக்கு இடமாகிய உடம்பினின்றும் பிரியச் செய்தல். உயிர்களுக்கு இதஞ் செய்தலே புண்ணியமும், அகிதஞ் செய்தலே பாவமுமாம். கொலையைப் பார்க்கினும் அகிதம் வேறில்லாமையால் கொலையே பாவங்கள் எல்லாவற்றிற்குந் தலையாயுள்ளது. கொல்லாமையைப் பார்க்கினும் இதம் வேறில்லாமையால், கொல்லாமையே புண்ணியங்களெல்லாவற்றிற்குந் தலையாயுள்ளது.

கொலையில்லாத ஞானமே ஞானம். கொலையில்லாத தவமே தவம். கொலையில்லாத தருமமே தருமம். கொலையில்லாத செல்வமே செல்வம். ஆதலினாலே சோர்வினாலும் கொலை பாவம் சிறிதும் விளையா வண்ணம் எப்பொழுதும் அருளோடு கூடிச் சாவதானமாக இருத்தல் வேண்டும். கொலை செய்ய ஏவினவரும், கொலை செய்யக் கண்டு அதைத் தடுக்காதவரும், ஒருவன் செய்த கொலையை மறைத்து அவனை இராசாவுடைய தண்டத்துக்குத் தப்புவித்தவரும், கொலை செய்தவரோடு பழகினவரும் கொலைப் பாவிகளே யாவர்.

கொலைப் பாவிகள் எண்ணில்லாத காலம் நரகத்துன்பத்தை யநுபவித்து, பின்பு பூமியிலே பிறந்து, ஈழை, காசம், குட்டம், பெருவியாதி, கருப்புச்சுரம், கைப்பிளவை முதலிய நோய்களினால் வருந்தி உழல்வார்கள். ... ......

### புலாலுண்ணல்.

புலால் உண்ணலாவது உயிரின் நீங்கிய ஊனைப் புசித்தல். புலால் கொலையினாலே கிடைத்தலால், புலாலுண்டவன் பின்னும் கொலை வாயிலாகப் புலாலை விரும்புதலால், புலாலுண்ணல் கொலைபாவத்துக்குக் காரணமுமாகும். இப்படியே எல்லாவிதத்தாலும் புலாலுண்ணல் கொலையோடு தொடர்புடையதாதலால், புலாலுண்பவர் உயிர்களிடத்து அருளில்லாதவரே. ஆதலால் புலாலைப் புசித்துக் கொண்டு உயிர்களிடத்து அருளுடையோம் என்பது நடிப்புமாத்திரமே அன்றி உண்மையாகாது. உலகத்திலே புலாலுண்பவர் இல்லையாயின் புலாலை விற்றற் பொருட்டு உயிர்க் கொலை செய்பவரும் இல்லை. ஆதலாற் கொலைப் பாவத்தைப் பார்க்கினும் புலாலுண்ணலே பெருங் கொடும் பாவம். .. ...

கொலை செய்தவரும், புலாலை விற்றவரும், புலாலை விலைக்கு வாங்கினவரும், புலாலைப் புசித்தவரும், புலால் புசியாதவரைப் புசிப்பித்தவரும், பிறர் சொல்லுக்கு அஞ்சிப் புலாலைப் புசித்தவருமாகிய எல்லோரும் பாவிகளே யாவர். அப்பாவிகளை நரகத்திலே இயம தூதர்கள் ... ...

மேற்கூறிய பாவிகள் எண்ணில்லாத காலம் நரகத்துன்பத்தை யநுபவித்து, பின்பு பூமியிலே பன்றி முதலிய இழிந்த பிறப்புகளாகப் பிறந்து இறந்து உழன்று மனிதப் பிறப்பை எடுத்து, பெருவியாதி, கருங்குட்டம், வெண்குட்டம், நீரிழிவு, கண்டமாலை முதலிய வியாதிகளினாலே வருந்துவார்கள்.

கங்கை முதலிய புண்ணிய தீர்த்தங்கள் எல்லாவற்றினும் ஸ்நானஞ் செய்தானாயினும், கடவுளைப் பூசித்தானாயினும், எண்ணில் கோடி தானஞ் செய்தானாயினும், ஞான சாத்திரங்களை ஓதி உணர்ந்தானாயினும், புலாலைத் தள்ளாது புசித்தவன் நரகத்தை அடைவான். ... ...

இத்தகைய நற்போதங்கள் நம் நாட்டின் நிலைமை நனிவிளக்கி, ஏனையோரையும் சீவகாருண்யத்தில் ஈடுபடச் செய்யும் இவ்வாறாய கட்டுரைகள் பாலப்பருவத்தே மூளையிற்படிந்து, இரத்தத்திற் கலந்து, நாம்புகளிலூறி இதயத்தினும் பதிந்து விடின் பின்னர் எக்காலத்தும்—எவ்வாற்றானும்—மாறுபடா, மாற்றப்படா எனல் அநுபவம். இதுவன்றோ தானங்களிற் சிறந்தது! தருமங்களுள் மிகுந்தது!!

தானம், தருமம், பிச்சை யென்ற பெயர்களாலும், "பாத்திரமறிந்து பிச்சையிடு" என்ற முறையாலும், வீண் பயம், நம்பிக்கை, ஆராய்ச்சியின்மை, வழக்கம் இவைகாரணமாக நாம் துர்விநியோகப்படுத்தி வரும் அநியாய செலவுகளால் நமது இந்திய நாட்டில் மாத்திரம் (28,82,341) இருபத்தெட்டு லட்சத்து எண்பத்திரண்டாயிரத்து முந்நூற்று நாற்பத்தொருவர் (சிறிது குறைய முப்பது லட்சம் பேர்வழிகள்) எவ்வித கவலையும் உழைப்புமின்றி சோம்பேறிகளாகவேயிருந்து பிறரால் உடல் வளர்த்து வருதல் 1924 வரு இந்தியா சட்டசபை விவாதங்களினின்றும் வெளியானதன்றோ?

இந்த முப்பது லட்சம் வேலையற்ற சோம்பேறிகளால் நமது நாடும், சமூகமும் விநாடிக்கு விநாடி எத்தகைய விரைவில் கீழ் நிலைக்குச் சென்றும் அழிந்தும் போகின்றன வென்பதை உண்மைச் சமூகாபிமானிகள் உணராமலிரார். இம் முப்பது லட்சம் சோம்பேறிகளும் நம்மால் பாதுகாக்கப்படாவிடில், மருத்துவ நூற்களிற் கூறும் நாலாயிரத்து நானூற்று நாற்பத்தெண்வகைப்பிணிகளினும் பெரும் பிணியாகிய பசிப்பிணியை யொழிப்பான் கருதி (லஜ்ஜை கெட்டுப் பிச்சை யெடுத்துப் பிழைக்கும் சோம்பற்றீத் தொழிலைவிட்டு) விவசாயம், கைத்தொழில், வியாபாரம் முதலியவஏதேனுமொன்றில் ஊன்றி நிலைத்து உழைத்து, தாமும் சுகிப்பதொடு இல்லறத்தாராக மாறுபட்டு குலத்தையும், சமூகத்தையும், முன்னேற்றும் வகையாலும், வழியாலும் சிரத்தையோடு முயன்று பாடுபட நேரலாம். இவ்வாறு ஓர் பெரிய மிகப் பெரிய லட்சக்கணக்கான சமூகமே சீர்திருந்துவதோடு இதனால் நாட்டின் நலமும் பெருகிப் பஞ்சமும், பிணியும் இல்லா தொழியலாம். இப்பெருஞ் சோம்பேறிக் கூட்டத்திற்கு நாம் வீணே கொடுத்துக் கெடுத்துவரும் ஊதியமனைத்தும் மீதமாகி தேசப் பொது நலத்திற்கு உதவியாகலாம். ஒருவகையால் முப்பது லட்சம் சோம்பேறிகளும் உழைப்பாளராகத் திரும்பி நாட்டிற்கு நலஞ் செய்வதொன்று. மறுவகையால் இந்த முப்பது லட்சம் சோம்பருக்கும் அளித்துவரும் ஊதியமனைத்தும் மீதமாவதொன்று. இவ்விதம் இருவகையிலும் நாடு நலமெய்தற்கு ஏதுவாகலாம்.

இதனால் தானங்களை மறுப்பதாக வேனும், வெறுப்பதாக வேனும் கொள்ளலாகா. தானங்களின் மிக்கது அன்னதானமும், இதனினுந்தக்கது அறிவைப் பெருக்கும் கல்வியை அளிப்பதாகிய வித்தியாதானமுமேயாம் எனல் அறிஞர் கொள்கை.

"தான் கற்ற நூலளவே யாகுமாம் நுண்ணறிவு" — "தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக் கற்றனைத் தூறும் அறிவு" என்னும் பொன்னுரைகளின் படிக்கு அறிவை விசாலிக்கச் செய்ய வல்ல கல்விப் பொருளை நல்குவதாகிய தானமே இன்றியமையாதெனல் சொல்லாமலமையும். தக்காரிடத்துத் தகுமுறையாற் பெறுங் கல்வி அன்னதானமேயன்றி பின்னும் முள்ள தானங்கள் பலவற்றிற்கும் ஆதாரமும் ஆதாரவுமாயிருத்தல் உலகானுபவம்.

"ஆவிற்கு நீர் என்று இரப்பினும் நாவிற்கு இரவின் இளிவந்ததில்"

பசுவிற்கு நீர் விடு என்று இரத்தலைப்போல நாவிற்கு அவமானம் வேறில்லை என்று கிளையூட்டி இதனால் தருமத்தையும் தானே முயன்று செய்ய வேண்டுவதன்றிப் பிறரிடம் யாசித்துச் செய்யலாகா தெனக் குறிப்பிட்ட குறளாசிரியர் அவதரித்த நம் கல்வி நாடு இந்நாள் போலிவேஷ யாசகக் கூட்டமயமாகவே காணப்படுதற்குக் காரணம், போதிய உண்மையை நுலாராய்ச்சியும், தக்கார் பிரசாரமும் இல்லாக் குறைபேயெனல் மிகையாகா. இரத்தலைவிட இறத்தலே சாலச் சிறப்புடைத்தென நமது நாடு எண்ணும் வகையில் சொல்லாலும், எழுத்தாலும் பிரசாரம் செய்தற்காக ஆங்காங்கு கழகங்காண கற்றோர் முற்படல் இக்கால சீர்திருத்தங்களுள் நனி சிறந்ததொன்றாகும்.

ஆகவே சின்னாள் பல்பிணிச் சிலக்காயுள்ள சிற்றுயிர்க்குற்ற துணையாகிய கல்வியைச்சமூக விருத்திற்கும், பொது நலத்திற்கும் ஏற்ற வகையில் அமைந்துள்ள இவ்வாறாய புத்தகங்களைப் பாடசாலைகளில் பாட புத்தகங்களாக பயிலுவிக்கச் செய்தலும், செய்வித்தலும் மிக மிக நலமாம்.

"நவசக்தி"





"எம்பயர் பாம்."

எல்லா நோய்களுக்கும் தேவாமிர்தம்.

The house hold remedy for all ailments is our "Empire Balm"

ஏஜெண்டுகள் தேவை.

புட்டி 1-க்கு ரூபாய் 0-8-0

டசன் 1-க்கு ரூ 5-0-0

விபரத்திற்கு:- எம்பயர்பாம், மனுபாக்சரிங் கம்பெனி என்ற விலாசத்திற்கு எழுதித்தெரியவும்
கீழமாரட்டு வீதி, மதுரை

ஜெகமெங்கும் புகழ் பெற்ற



அசல் சேட்
இ. பி. குமரவேல்
நயம் பீடிகள்

அன்பிற் சிறந்த கனவான்களே!

நாம் எல்லோரும் வெகு நாளாக நமது அசல் சேட் இ. பி குமாரவேல் பீடிகளை தவிர மற்ற போலி பீடிகளை உபயோகப்படுத்த மாட்டோமென்பது நிச்சயமாய்த் தெரிந்தும் சிலர்கள் போலி பீடிகளைக் கொண்டு ஊர் தோறும் பல பல பெயர்கள் சொல்லி விற்பனை செய்கிறார்கள்.

ஆனதால் நமது அசல் சேட் இ. பி. குமரவேல் பீடி கட்டுகளில் ஒட்டி இருக்கும் லேபில்களை கவனமாய்ப் பார்த்து இ. பி. குமரவேல் பீடிதானா என்று கவனித்து வாங்கி உபயோகப்படுத்தி ஆனந்தியுங்கள்.

புரோப்ரைட்டர்ஸ்,

இ. பி. குமரவேல் பீடி கம்பெனி

பிராஞ்சுகள்:—

செகன்றாபாத்து,
ஐதறாபாத்து
& கொல்லம்

ஹெட்டாபீஸ்,
முக்கூடல்.

மேலே குறிப்பிட்ட எங்கள் பிராஞ்சுகளில் நயம் பீடி பல தரங்கள் தயார்செய்து தூர தேசங்களுக்கு V. P. மூலமாயனுப்பி பெரும் கியாதியோடு நடந்தேறிவருகிறது. வேண்டியவர்கள் விபரம் எழுதி கேட்கவும்.

## சென்னை மாகாண 1921-வருட ஜனக்கணித ஆராய்ச்சி.

இனி ஜாதிவாரியாக படித்தவர்களின் தொகையை பிரித்து எழுதுவாம். அதுவும் இம்மாகாணத்தில் முக்கியமாயுள்ள தமிழர்களை ஜனத்தொகைக்குத் தக்கபடி முதலில் பிரித்து அந்தந்த ஜாதியார்களில் படித்தவர்களின் தொகையையும் குறிப்பிடுவாம்.

தமிழர் என்பது, தமிழையே தாய்பாஷையாகக் கொண்டவர்கள். தமிழ் நாடானது, இம்மாகாணத்தில் ஒரு முக்கிய பிரதேசமானதால், தமிழ் நாட்டிலுள்ள தமிழர்களை முதலில் எடுத்துக் கொண்டோம்.

### பள்ளிகள் மொத்தம் 2337993

| | |
|---|---|
| ஆண்களின் ஜனத்தொகை | 1325361 |
| ,, படித்தவர்கள் | 149296 |
| ,, ஆங்கிலம்படித்தவர்கள் | 4554 |
| பெண்களின் ஜனத்தொகை | 1362632 |
| ,, படித்தவர்கள் | 5817 |
| ,, ஆங்கிலம்படித்தவர்கள் | 163 |

இச்சாதியினரில் தெலுங்கு முதலிய பாஷை பேசக்கூடியவர்களுமிருக்கின்றார்கள்; ஆனால் தமிழ் பேசக்கூடியவர்களைமட்டும் ஈண்டு குறிப்பிட்டிருக்கின்றோம். இச்சாதியினரில் தமிழ் பேசக்கூடியவர்களில் படித்தவர்களைக் கணக்கிடும்போது 100—க்கு 6-பேர்களாகும் ஆனால் ஆண்களை மட்டும் பிரித்துப் பார்க்கும்போது 100-க்கு 11 பேர்களாகும்.

### வெள்ளாளர்கள் மொத்தம் 2653775.

| | |
|---|---|
| ஆண்களின் ஜனத் தொகை | 1311309 |
| ,, படித்தவர்கள் | 317949 |
| ,, ஆங்கிலம் படித்தவர்கள் | 31031 |

ஆண்களில் படித்தவர்கள் 100-க்கு 24 பேர்கள்.

| | |
|---|---|
| பெண்களின் ஜனத்தொகை | 1342466 |
| ,, படித்தவர்கள் | 33731 |
| ,, ஆங்கிலம் படித்தவர்கள் | 1362 |

பெண்களில் படித்தவர்கள் 100-க்கு 3 பேர்கள்

### பறையர்கள் மொத்தம் 2337036

| | |
|---|---|
| ஆண்களின் ஜனத்தொகை | 1143430 |
| ,, படித்தவர்கள் | 39933 |
| ,, ஆங்கிலம் படித்தவர்கள் | 1868 |

ஆண்களில் படித்தவர்கள் 100-க்கு 3 பேர்கள்

| | |
|---|---|
| பெண்களின் ஜனத்தொகை | 1193556 |
| ,, படித்தவர்கள் | 2463 |
| ,, ஆங்கிலம் படித்தவர்கள் | 136 |

பெண்களில் படித்தவர்கள் 1000-க்கு 2 பேர்கள்

### பள்ளர்கள் மொத்தம் 862685

| | |
|---|---|
| ஆண்களின் ஜனத்தொகை | 418832 |
| ,, படித்தவர்கள் | 18750 |
| ,, ஆங்கிலம் படித்தவர்கள் | 280 |

ஆண்களில் படித்தவர்கள் 100-க்கு 4 பேர்கள்

| | |
|---|---|
| பெண்களின் ஜனத்தொகை | 444355 |
| ,, படித்தவர்கள் | 580 |
| ,, ஆங்கிலம் படித்தவர்கள் | 3 |

பெண்களில் படித்தவர்கள் 1000-க்கு ஒருவர்.

### இடையர்கள் மொத்தம்:—

| | |
|---|---|
| ஆண்களில் மொத்தம் | 367551 |
| ,, படித்தவர்கள் | 41032 |
| ,, ஆங்கிலம் படித்தவர்கள் | 3269 |

ஆண்களில் படித்தவர்கள் 100க்கு 11 பேர்கள்.

| | |
|---|---|
| பெண்களில் மொத்தம் | 376052 |
| ,, படித்தவர்கள் | 2995 |
| ,, ஆங்கிலம் படித்தவர்கள் | 129 |

பெண்களில் படித்தவர்கள் 100-க்கு ஒருவர்.

P. Tr.

(தொடரும்.)

## துண்டுத் துணுக்குகள்.

### சட்டசபைத் தேர்தல்.

அடுத்து வரும் சென்னைச் சட்டசபை தேர்தலுக்கு அபேட்சகர்களாய் நிற்க விரும்புவோர் விண்ணப்பங்கள் அக்டோபர்மீ முதல் தேதிக்குள் தாக்கல் செய்யப்படவேண்டுமென்று முடிவு செய்யப்பட்டிருப்பதாயச் சொல்லப்படுகிறது.

* *

### கோர்ட்டுகளைக் குறைகக.

பிரான்சில் மந்திரிசபையினர்களத்தை முன்னிட்டு 228 கோர்ட்டுகளையும், 218 சிறிய சிறைக்கூடங்களையும் எடுத்துவிடத் தீர்மானித்திருக்கிறது. இதுவன்றி அதிகப்படியாக இருக்கும் ராணுவக்கூடங்களையும், மைதானங்களையும் விற்றுவிடவும் தீர்மானித்திருக்கின்றனர்.

* *

### அஸ்ஸாம் காங்கிரஸ் தலைவர்.

இவ்வருஷக் கடைசியில் அஸ்ஸாமில்கூடும் காங்கிரஸிற்கு ஸ்ரீமான் எஸ். ஸ்ரீனிவாசய்யங்கார் வரவேற்புக் கமிட்டியால் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.

* *

### மகாத்மாஜீயின் மனப்போக்கு.

மகாத்மாஜீ மீண்டும் வெளிவந்து தேசிய வேலைகளைத் தலைமை வகித்து நடத்தவேண்டுமென்று பல பிரபலஸ்தர்கள் கேட்டுக்கொண்டதற்கு அவ்வேண்டுகோளுக்கிணங்கி நடக்கத்தம்மால் முடியவில்லையென்று தெரிவித்திருக்கிறார்.

* *

அமெரிக்காவில் ஆக்லோ லோட்டல்ஸ் என்னும் ஒருவகை மீன் இருக்கின்றது. லண்டன் சர்வ கலாசாலையைச் சேர்ந்த டாக்டர் ஸ்பால் ஒருவகை மருந்தை அம்மீனுக்குள் பாய்ச்சுவதால் அம்மீன் தரையிலும் வசிக்கும்படி செய்யலாம் என்று பரீட்சை செய்து பார்த்துக்கண்டு பிடித்திருக்கிறார். ஜலத்தில் வசிக்கும் மீனுக்கும் மருந்து உட்செலுத்தப்பட்டு தரையில் வசிக்கும் மீனுக்கும் வித்தியாசமில்லை. ஆனால் ஜலத்திலிருக்கும் மீனுக்கு மூன்று சுவாச உறுப்புகள் வெளியில் காணப்படுகின்றன. அவை தரையிலிருக்கும் மீனில் காணப்படவில்லை.

* *

சமுத்திரம் ஆரம்பத்தில் உப்பாக இல்லை. நதிகள் உப்பைக்கொண்டு வந்து சேர்த்துவிட்டன. நதிகள் பூமியிலுள்ள உப்பைக் கரைத்துக்கொண்டு போய் சமுத்திரத்தில் சேர்த்துவிடவே, நாளுக்கு நாள் சமுத்திரம் அதிக உப்பாகிக் கொண்டேயிருக்கின்றது.

* *

உலகத்தில் உபயோகப் படுத்தப்படும் சோடாவின் பெரும்பாகம் கெனியாவிலுள்ள மகதி ஏரியிலிருந்து வருகின்றது. 15 மைல் நீளம் 4 மைல் அகலமுள்ள அவ்வேரி நல்ல கோடையிலும் உறைந்தது போலவே காணப்படுகின்றது. சோடாகட்டியாக மேல் மட்டத்தில் இருப்பதே இவ்வாறிருப்பதற்குக் காரணம். 3 அங்குலம் ஆழம் வரையில் இந்த சோடா கட்டியாக மிதக்கின்றது. அதற்கு அடியில் ஜலம் இருக்கின்றது. இந்தச்சோடா மிகுந்த கெட்டியாக இருப்பதால் மனிதர் அதன் மீது நடந்து போகலாமென்று சொல்லப்படுகின்றது.

* *

திருவாங்கூரைச் சேர்ந்த திரூரில் ஒருயானைப் பாகன்தனதுமதம் பிடித்த யானையால் மிதியுண்டு மிக்க காயமுற்று ஆங்கில வயித்தியசாலைக்குச் சென்றான். வயித்தியர் மற்றொருவர் சதையை வைத்துத் தைத்தாலன்றி உயிர் பிழைப்பது அரிதென அறிவித்தார். இது சுற்றுக் கிராமங்களிலெல்லாம் பரவியது. பண வல்லி என்ற ஊரில் கன்னுடு கிருஷ்ணய்யர் என்பார் தம் சதையைக் கொடுக்க முன்வந்து வயித்தியரிடந் தெரிவித்தார். வயித்தியர் அவர் இடுப்புப் பக்கத்திலிருந்து சதையெடுத்துப் பாகன் உடம்பில் வைத்துத்தைத்தார். கிருஷ்ணய்யர் ஒரு மாதம் வைத்தியசாலையிலிருந்து ரணத்தை ஆற்றிக் கொண்டு பாகனுக்கும் உயிர் தந்தார் எனக் கூறப்படுகிறது.

---


நாடார் கனவான்களே! இதை வாசியுங்கள்.

## கருப்புக்கட்டி கமிஷன் & பார்வேடிங் ஏஜென்ஸி, லிமிட்டட், திருநெல்வேலி.

மூலதனம் ரூ 300000 (மூன்று லட்சம்) பங்கு 1-க்கு ரூ 10

இக்கம்பெனி கவர்ன்மெண்டு சட்டப்படியும், இந்தியன் கம்பெனி ஆக்ட்பிரகாரமும் 1925-ம் வருஷம்ஜூலை மீ 1உ ரிஜிஸ்டர் செய்யப்பட்டு வேலையும் ஆரம்பிக்கப்பட்டது.

1926-ம் வருஷம் ஆகஸ்டு மீ 16 உ முடிவாக 13½ மாதத்திற்குரிய கணக்குகளை கவர்ன்மெண்டு செர்டிபைபிட் ஆடிட்டர் அவர்கள் சோதித்து, கோஷ்வாறு கணக்கும், லாப நஷ்டக் கணக்கும் போட்டிருக்கிறார்கள். ஷை கணக்கின்படி நாளது வருஷத்தில் இக்கம்பெனியில் ரூ 47322-5-0-க்கு சரக்குகள் வாங்கி கமிஷனுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. வருஷத்தில் வட்டி ரூபமாயும் கமிஷன் ரூபமாயும், டிஸ்கவுண்டு ரூபமாயும் கிடைத்திருக்கும் மொத்த வருமானம் ரூ 4154-2-0.

கம்பெனிக்கு இது முதல் வருஷமாக இருப்பதாலும் நமக்கு முன்னதாகவே பல வருஷங்களாக இவ்வியாபாரம் செய்து வருகிறவர்களுடன் நாம் போட்டிபோட்டு வேலை செய்ய வேண்டியதிருந்தமையாலும், வசூலிக்கப்பட்ட மூலதனம் குறைவாக இருப்பதாலும், இவ்வியாபாரத்தை விஸ்திரப்படுத்தி கம்பெனியை முன்னுக்குக் கொண்டுவரும் பொருட்டு செலவுகள் அதிகமாக ஏற்பட்டதினாலும் அதிக லாபம் கிடைக்க ஏதுகாமில்லாமல் போயிற்று.

இக்கம்பெனிக்கு அதிகமாக கருப்புக்கட்டி ஏற்றுமதிசெய்யும் நாசரேத்து ஊரிலும், திருவனந்தபுரத்திலும் பிராஞ்சு ஆபீஸ்கள் இருப்பதுடன், தூத்துக்குடியிலும், கமிஷன் அண்டு பார்வேடிங் டிப்பார்ட்மெண்டுகள் ஏற்படுத்த முயற்சிகள் நடந்து வருகின்றன.

கம்பெனியின் மூலதனம் கொஞ்சமாகஇருப்பதினால், வியாபாரம் விரிவாக நடக்கும் பொருட்டும், வந்த ஆர்டர்களுக்கு அனுப்பும் பொருட்டும், கொஞ்சம் கடன் வாங்கியிருக்கிறது. கம்பெனியின் மூலதனம் வியாபாரத்திற்குத் தோதாக விருத்தியாகி இருந்தால், கடன்களுக்கு செலுத்தும் வட்டிகள் எல்லாம் பங்காளிகளுக்கே லாபமாகும். ஆகையால் தக்க லாபம் அடையக்கூடிய இந்தக் கம்பெனியில் நமது நாடார்நண்பர்கள் யாபேரும் அவரவர் வன்மைக்கும் தன்மைக்கும் தக்கவாறு பங்குகள் எடுத்தும், பங்குகள் எடுக்கமற்றவரைத்தூண்டியும்கம்பெனியின் நன்னோக்கம் சித்தியடையுமாறு உதவிபுரிய அன்பாய் வேண்டிக்கொள்ளுகிறோம். கம்பெனியில் பங்குகள் எடுக்க விரும்புவோர் கம்பெனியின் அஸிஸ்டண்டு மானேஜிங்டைரக்டர் அவர்களுக்கு அப்ளிகேஷன் பாரம், மற்றும் விபரம் அனுப்பும்படி எழுதி இனமாகப் பெற்றுக்கொள்ளலாம்.

N. B. இக்கம்பெனியின் அஸிஸ்டண்டு மானேஜிங்டைரக்டர் மகா-ா-ா-ஸ்ரீ T. S. தாஸன் நாடார் அவர்கள் B. Sc, F. S. Sc, F. I. C. A. கம்பெனியின் பங்கு விஷயமாக இலங்கைத் தீவில் பல இடங்கள் போய் நாடார் மகான்களைக் கண்டுபேசி ஏற்பாடுகள் செய்ய நாளது வருஷம் செப்டம்பர் மாதக்கடைசியில் புறப்படுவதால், ஷையார்களுக்கு வேண்டிய உதவிபுரிந்து அவர்கள் வரும் நோக்கத்தை சித்தியடையச்செய்து அனுப்பும்படி இலங்கைவாழ் நாடார் கனவான்களை விரும்பிக் கேட்டுக்கொள்ளுகிறோம். அவர்களை முகதாவில் கண்டு கம்பெனியைப் பற்றியும் மற்றக்காரியங்களையும் அறிய விரும்புவோர் ஏற்கனவே அவர்களுக்குத் தங்கள் விலாசத்தை எழுதி ஏற்பாடு செய்துகொள்ளவும். அவர்கள் கொழும்பு விலாசம்:—

c/o The Secretary, Y M C A
Fort, Colombo.



## எலிமெண்டரி பாட ரத்தினங்கள்.

லிவிக்ஸ், நேச்சர் ஸ்டடி ஸயன்ஸ் அடங்கியது. எல்லாப் பாடசாலைகளுக்கும் உபாத்திமாருக்கும் மிகவும் அவஸியம். 3-ம் பதிப்பு விலை அணா 14. இது ஆசிரியரிடமும, சென்னைவேப்பேரி, எஸ். பி. ஸி. கே. டிப்போவிலும் கிடைக்கும்.

ஜெம் வக்கபிளரி.

இங்கிலீஷ் தமிழ் முதல் புஸ்தகம் 6 அணா; 2-ம் புஸ்தகம் 8 அணா. 6 மாதத்தில். இங்கிலீஷ் பேச எழுத லேசாய்க்கற்க எல்லாருக்கும் மெத்த அவஸியம். ஒரு நேர்த்தியான லெட்டர் ரைட்டரும் அடங்கும். இது ஆசிரியர் நாகபட்டணம் மிஷின் ஹைஸ்கூல் ஆசிரியா எஸ். வி. கோயிலபிள்ளையிடமும் ஆரணி மிஷன் பிரஸிலும், ஷை சென்னை எஸ். பி. ஸி. கே. டிப்போவிலும் கிடைக்கும். உபாத்திமாருக்கும் வியாபாரிகளுக்கும் 12 ஜதைக்குமேல் விசேஷித்த கமிஷன்.


## விவசாயப் பழமொழிகள்.

1. அற்பிசி யடியோடு காய்ந்தால் அண்டைப் புலம்போல் என் நிலமும்.
2. அற்பிசி தலை வெள்ளமுங் கார்த்திகை கடை வெள்ளமும் கெடுதி.
3. அற்பிசி மாதம் இடி யிடித்தல் அடிக் கிணற்றில் அருகு முளைக்கும்.
4. அற்பசி மாதம் நட்ட நடவும் ஐம்பது வயதில் பெற்ற பிள்ளையும்.
5. அற்பிசி விதைப்பு அவலுக்கும் நெல் காணாது.